இதழ்–29

16.07.2021

# தூம்

பல்சுவை மின்னிதழ்



பெருவெள்ளத்திற்கான பயணம்

# நெற்றிக் கண் திறப்பினும் குற்றம் குற்றமே...!




இதிகாசங்களும் இலக்கியங்களும் காரணத்தோடுதான் காலம் கடந்தும் கடத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. மாதா பிதா குரு தெய்வம் என்கிற அடிப்படையில் எம் வணக்கத்துக்கிரியவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. எந்த சந்தர்ப்பத்திலும் இவர்களுக்கான முக்கியத்துவமும் முன்னுரிமையும் மாறாதா? இவர்கள் தவறு செய்தால் தட்டிக் கேட்கலாமா? தண்டனை இல்லையா?

அனைவரிலும் முதன்மையானவளாக அன்னை பார்க்கப்படுகிறாள். தாயிற் சிறந்த கோயிலுமில்லை என்கிறார்கள். அப்படிப்பட்ட தாய் தர்மத்தில் இருந்து விலகி நடந்தால் என்ன செய்வது? தாயை பழிக்கக் கூடாது என்று குற்றத்தை பொறுப்பதா? ஒருபோதும் அவ்வாறு எமது முன்னோர்கள் சொல்லவில்லை. கற்பு நெறி தவறிய தாயின் சிரத்தை தந்தையின் ஆணைப்படி வெட்டி வீழ்த்திய பரசுராமனின் கதை மூலம் தாயே ஆனாலும் குற்றம் செய்தால் தண்டனை கிடைக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள்.

அதே போல் மக்களுக்கு பல கொடுமைகளை செய்த இரணியனுக்கு மகன் பிரகலாதன் ஊடாகவே பாடம் புகட்டி நரசிம்ம மூர்த்தி வதம் செய்த கதை மூலம் தந்தையே ஆனாலும் தர்ம நெறி தவறினால் தண்டனைக்குரியவராகிறார் என்பதை உணர்த்தியிருக்கிறார்கள்.

திரௌபதி எனும் பெண் அரசவையில் அவமானப்படுத்தப்பட்ட போதும், மேலும் பல சந்தர்ப்பங்களில் மகன் அஸ்வத்தாமன் மீது கொண்ட பாசத்தால் அநீதிகள் நடந்த போதும் அமைதி காத்த துரோணரை அவரது தலைமைச் சீடன் அர்ச்சுனன் அவரிடம் கற்ற வில் வித்தை மூலமே வீழ்த்திய கதையும் இதையே சொல்கிறது.

எல்லோருக்கும் அப்பாற்பட்ட சக்தியாக பார்க்கப்படும் இறைவனே ஆனாலும் குற்றம் செய்தால் நெற்றிக் கண் திறப்பினும் குற்றமே என்று நக்கீரன் கதை மூலம் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

எனவே கர்த்தாவுக்கு ஏற்ப குற்றத்தின் அளவு குறைவதில்லை. தர்மம் எல்லோருக்கும் பொதுவானது. குற்றம் செய்தால் எதிர்ப்பது தவறாகாது. எதிர்க்காமல் விடுவது தான் தவறு. ஒப்பற்ற அன்பினால் வழங்கப்படும் மதிப்பையும் மரியாதையையும் துஷ்பிரயோகம் செய்வது மகாபாவம் என்பதை யாவரும் உணர வேண்டும்.

***தர்மமே வெல்ல வேண்டும்!***

இணை ஆசிரியர்கள்
ஜ.வி. மகாசேனன்
இ. வினோஜன்

திறனாய்வாளர்கள்
கு. கீர்த்தனன்
த. அபிவிர்ணா

துமி பல்சுவை மின்னிதழ்

ஆசிரியர்
ச. சந்தோஷன்

www.thumi.org
thumi2016@gmail.com
www.facebook.com/Thumi06

வடிவமைப்பாளர்
வ. குணநீதன்

# இவ்விதழில் துமித்தவை...

04 குட்டிச் சிவப்புப் பிரசங்கி இவள்!!!
07 ஏகாதிபத்தியம்
9 கண்ணால் பேசும் பெண்ணே...
14 பிளவுபட்ட உதடு மற்றும் அண்ணம்
16 வெள்ளைக் காதல்
19 சிந்தனைக்கினிய கந்தபுராணம்
21 அந்திமக்காலம்
23 நவீன வேதாள புதிர்கள்
25 கமலாம்பாள் சரித்திரத்தின் முக்கியத்துவம்
27 குறுக்கெழுத்துப் போட்டி
28 சித்திராங்கதா
32 சூலக நீர்க்கட்டி நோய் நிலைமை
34 ஈழச் சூழலியல்
38 விபிள்டன் 2021

சிங்ககிரித்தலைவன் தொடர் இம்முறை இடம்பெறாமைக்கு மன்னிக்க வேண்டுகிறோம்...!

# குட்டிச் சிவப்புப் பிரசங்கி இவள்!!!

மலர்கள் மகத்துவமானவை. சொற்பமான ஆயுள் இருந்தாலும் சிற்பமாக விருந்தளிப்பவை. மனிதன் பார்ப்பது போல் பிறப்பை வைத்து வர்க்க வேறுபாட்டை மலர்கள் பார்ப்பதில்லை. மனிதனின் சிறப்பு குணம். மலர்களின் சிறப்பு மணம். சேற்றுச் சகதியின் மணம் பலருக்கும் பிடிப்பதில்லை. ஆனால் அந்த சகதியில் வளரும் மலரில் சேறு மணப்பதில்லை. பூவின் வாசமே நிறைந்திருக்கும். சகதி மட்டுமா மலரின் இருப்பிடம்? காலூ ன்றிய இடமெல்லாம் பறங்கியர் கோட்டை கட்டியது போல வேரூன்றும் இடமெல்லாம் தாவரம் மலர்க்கொடியை பறக்க விடும். கற்பாறையோ, களிமண் தரையோ, தாவரம் இருந்தால் மலர் இருக்கும்.

இவ்வாறு அழகியலையும் வாழ்வியலையும் அடிநாதமாக கொண்ட பூக்களால் நிறைந்திருப்ப தால்த்தான் பூமி என்று பெயர் வந்திருக்க வேண்டும். நடந்தவற்றை விடுங்கள். அங்கே நடப்பதைப் பாருங்கள்.

பூமியைச் செம்பட்டுப் போர்வையால் போர்த்தியிருக்கிறது வைகறை. செக்கஞ்சிவந்த வானை நோக்கி மெல்ல விரிகிறது ஒரு செவ்விதழ்ப்பூ.

இரவெல்லாம் ஒற்றைக்காலில் கதிரவனை எண்ணி காதல்த் தவம் புரிந்த காதலி அதிகாலையில் வரம் பெறுகிறாள்.

நிலத்தில் நின்று நீரால் வளர்ந்து வான்நோக்கி வாசம் எனும் தூது அனுப்புகின்ற அக்கினிச் சுவாலையாய் ஐம்பூதங்கள் சேர்த்து செதுக்கிய சிற்பமாய் செவ்விதழ் விரித்து மலர்கிறாள் மலர்.

காலையில் மலரும் பூ- மனைவி....
இரவில் மலரும் பூ- காதலி....

இதை எப்படி எடுத்துக் கொள்வது என்பது உங்கள் விருப்பம். ஒன்று மட்டும் சொல்கிறேன். காலைப்பூக்களின் வாழ்க்கை பட்டப்பகல் வாழ்க்கைதான். ஆனால் பகிரங்கமான வாழ்க்கை அல்ல.



இருட்டின் நடுவே ஒரு வியப்புக்குறி போல் காத்துநின்று விடியும் பொழுதினில் ஒரு விடையைச் சொல்கிறது இச்செவ்விதழ்ப்பூ.

இந்தக் குட்டிச்சிவப்புப் பிரசங்கி செங்கதிரோனிற்கே எதிரில் நின்று பிரசங்கம் செய்கிறது. தலைக்கனமும், தற்தாழ்வும் கொள்ளாது தலை நிமிர்ந்து பேசுகிறது. என்ன பேசுகிறது?

இரவெல்லாம் ஒளிந்திருந்து வானை உற்றுப்பார்த்து கண்டு கொண்ட இரகசியங்களை அதிகாலையில் பேசத் தொடங்குகிறது. நட்சத்திரங்கள் செய்கின்ற கண்சிமிட்டு சில்மிசங்களை, விடிந்ததும் மொய்க்கவென போட்டியிட்டு விழித்திருக்கும் பூச்சிகளை, சுவாலை என்றெண்ணி இதை ஊதி அணைக்க முயன்று முயன்று தோற்றுக்கொண்டிருந்த முட்டாள் காற்றை பற்றி என இரவிரவாய் நினைத்து சிரித்ததை எல்லாம் அதிகாலை முதல் பேசத் தொடங்கிறது செவ்விதழ் மலர்.

ஒரு சிறுமி வந்து மலர்ந்து கொண்டிருக்கும் மலரை ஆசையோடு பார்க்கிறாள். ஒரு குழந்தை ஆச்சரியத்தோடு பார்க்கிறது. ஒரு வாலிபன் காதலியாகப் பார்க்கிறான். ஒரு கவிஞன் கவிதையாய்ப் பார்க்கிறான். அது அனைவரையும் பற்றற்ற புன்னகையோடு பார்க்கிறது.

ஒருவன் நீரூற்றி விட்டுப் போகிறான். நனைந்த இதழ்கள் கண்டு இன்னொருவன் பூக்களிற்கு வியர்க்கிறது என்று விசிறி விட்டுப் போகிறான். புன்னகை மாறாமல் ஒரு துறவியைப் போல் எல்லாவற்றையும் ஏற்றுக் கொள்கிறது அந்தப் பேரழகு.

டாக்லியா பூ என்று தனக்கொருவன் பெயர் சொல்லிக் கொண்டே தன்னைச்சுற்றிச் சுற்றிப் புகைப்படம் எடுப்பதை பொறுமையோடு இரசித்துக் கொண்டிருந்தது அது. அவன் எடுத்த அத்தனை புகைப்படத்திலும் தெரிந்த அந்த சலிக்காத புன்னகையைக் கண்டு நெகிழ்ந்தவன் பூமியின் ஆகச்சிறந்த மாதிரியழகி நீதான் என்று தனது புன்னையால் அதற்குச் கிரீடம் இட்டுச் சென்றான்.

பசியோடு ஒரு ஏழைச்சிறுவன் அதைப் பழமென்றெண்ணிப் பறிக்க வந்தான். அருகில் வந்த பின்னும் அதன் ஆனந்தப் புன்னகை மாறாத விந்தை கண்டு ஆச்சரியப் புன்னகை கொண்டான். தன் புன்னகையில் இன்னொரு புன்னகை உருவாவதை எண்ணி தன் புன்னகை வென்றுவிட்டதாய் கைதட்டிச் சிரித்தது மலர்.

புத்தி பேதலித்த ஒரு முதியவன் என்ன நினைத்தானோ தெரியாது. பூவிதழ்களை நோக்கி கல்லெடுத்தெறிந்தான். பதறாதீர்கள். எந்தக்கல்லும் அந்த இதழ்களில் படவில்லை. ஆனால் அவன் எதற்காக கல்லெறிகிறான்?
பூவிதழை ஏதாவது கனியென்று நினைத்துக் கல்லெறிகிறானா? அல்லது சிரிக்கும் பைத்தியம் என்று

நினைத்துக் கல்லெறிகிறானா? அல்லது புன்னகை தர வந்தவர்களுக்கெல்லாம் இந்த உலகம் தந்த மரியாதையைத் தருவதற்காய் கல்லெறிகிறானா?

வெளிச்சத்தின் உச்சமான பொழுதில் தட்டுத்தடுமாறி வந்த குருடன் ஒருவன் தவறி விழுந்ததில் பூவிதழிலும் பலமாக அடிபட்டு விட்டது. பூவைப் பாருங்கள். அதன் கண்களில் தெரிவதென்ன கண்ணீரா? அப்படியாயின் அவை இப்போது அழுகின்றனவா?

**உண்மையைச் சொல்லுங்கள்!**

**அவை தன் இதழ்கள் பிய்ந்த வலியில் தான் அழுகின்றனவா?**

# கறுப்புக் கோழிகள்

“கறுப்புக் கோழிகள்” பற்றி அறிந்திருக்கிறீர்களா?? இவை அதிக விலைக்கு விற்கப்படுகின்றன.

அயாம் செமனி என அழைக்கப்படும் இது இந்தோனேசியாவில் காணப்படும் ஒரு அசாதாரண மற்றும் ஒப்பீட்டளவில் நவீன கோழி இனமாகும்.

அவற்றில் EDN3 எனப்படும் சக்திவாய்ந்த மரபணு உள்ளது, இது அதிகப்படியான கருமையை ஏற்படுத்துகிறது, மேலும் உடலில் உள்ள அனைத்து உயிரணுக்களும் இந்த மரபணுவை வெளியிடுகின்றன.



எனவே சேவலின் இறகுகள், கண்கள், தோல், அனைத்து உள் உறுப்புகள் மற்றும் எலும்புகள் கறுப்பு நிறமாக மாறும். இரத்தம் மட்டுமே சாதாரண நிறத்தை எடுக்கும்.



இதேபோன்ற இனமான கோழி, கடக்நாத், மத்திய இந்தியா மற்றும் ராஜஸ்தானின் ஏழை மற்றும் பழங்குடி மக்களிடையே காணப்படுகிறது. அவை புனித விலங்குகளாக கருதப்படுகின்றன





அ.திருமருகன்
மாணவன்
இலங்கை சட்டக்கல்லூரி

**அமெரிக்காவின் ஏகாதிபத்தியம்**

ஒரு முன்னாள் காலனி ஆதிக்கத்தின் கீழ் இருந்த நாடாக ஏகாதிபத்திய எதிர்ப்பினை வெளிப்படுத்தி வந்த அமெரிக்கா காலப்போக்கில் தனது கொள்கைகளிலிருந்து விலகி இன்று முக்கிய ஏகாதிபத்திய சக்தியாக விளங்கி வருகிறது.

**19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும், தியோடோர் ரூஸ்வெல்ட் மத்திய அமெரிக்காவில் செயல்படுத்திய தலையீட்டுக் கொள்கைகள் மற்றும் வுட்ரோ வில்சன் அமெரிக்க பாராளுமன்றத்தின் கூட்டத்தில் "ஜனநாயகத்திற்காக உலகத்தை பாதுகாப்போம்" என்று முழங்கியது அமெரிக்காவின் போக்கில் மாற்றத்தைக் கொண்டு வந்தது.**



அமெரிக்கா பெரும்பாலும் இராணுவப் படைகளால் ஆதரவளிக்கப்பட்டு அவை திரைக்குப் பின்னால் இருந்து பெரும்பாலும் இயக்கப்பட்டன. வரலாற்று பேரரசுகளின் ஆதிக்கம் மற்றும் மேலாதிக்கத்தின் பொதுவான கருத்துடன் இது ஒத்திருக்கிறது.

2015 ஆம் ஆண்டின் புள்ளிவிபரப்படி உலகம் முழுவதும் 70 க்கும் மேற்பட்ட நாடுகளில் கிட்டத்தட்ட 800 இராணுவ தளங்களை அமெரிக்கா கொண்டுள்ளது.



**இலங்கையில் ஐரோப்பிய ஏகாதிபத்தியம்**

**போர்த்துக்கீசர்கள் (Portuguese)**

இந்தியாவிற்கு கடல்வழி கண்டு பிடிக்கும் முயற்சியில் முதன்முதலில் ஈடுபட்டவர்கள் போர்த்துக்கீசர்கள்.

போர்த்துக்கீசிய மன்னரான ஹென்றி தனது கப்பல் மாலுமிகளை புதிய கடல்வழி பயணத்தை ஊக்குவித்ததன் காரணமாக வாஸ்கோடகாமா என்ற மாலுமி நன்னம்பிக்கை முனையை கடந்து இந்தியாவின் மேற்கு கடற்கரையிலுள்ள கள்ளி கோட்டையை அடைந்தார்.

இலங்கைக்கு போர்த்துக்கீச தளபதி டொன் லொரேன்கோ டி அல்மேதா தலைமையில் 1505யில் புறப்பட்ட கப்பல் புயலில் சிக்கித்தவித்து பின்னர் கொழும்பு கரையை அடைந்தது.



அங்கே முதலில் வர்த்தக தளத்தை அமைத்த போர்த்துக்கீசர், பின்னர் அரசியல் உட்பூசல்களை பயன் படுத்தி தமது பலத்தை விஸ்தரித்து கொண்டனர். பின்னர் இலங்கையின் கரையோரம் போர்த்துக்கீச வசப்பட்டது.

## ஒல்லாந்தர்கள் (Dutch)

ஒல்லாந்தர்கள் என்பவர்கள் ஹாலந்து நாட்டைச் சார்ந்தவர்கள் ஆவார்கள். 1638 செய்யப்பட்ட ஒப்பந்தத்தின் காரணமாக போர்த்துக்கீச வசமிருந்த



கரையோரப் பகுதிகள் ஒல்லாந்தரால் கைப்பற்றப்பட்டது.

## ஆங்கிலேயர்கள் (British)

இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்தவர்கள் தான் ஆங்கிலேயர்கள். 1796 ஆம் ஆண்டு இலங்கை பிரித்தானியர்களின் ஆட்சியின்கீழ் வந்தது.

முதலில் கரையோர பிரதேசங்களில் ஆதிக்கத்தை தக்கவைத்துக் கொண்ட ஆங்கிலேயர் முழு நாட்டையும் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர தொடர்ந்தும் அயராது முயன்றார்கள்.



பின்னர் 1815 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட கண்டி ஒப்பந்தத்தின் மூலம் முழு இலங்கையையும் தம்முடைய கட்டுப்பாட்டுக்கு கீழ் கொண்டு வந்தார்கள்.

இந்த பத்தி தினமணியில் வெளிவந்த ஏகாதிபத்தியம் எனும் கட்டுரையினை தழுவி மாற்றங்களுடன் இலங்கைக்கு ஏற்ற வகையில் எழுதப்பட்டுள்ளது.

*சாரல் தூறும்..............!!!!!*

ரசிக்கும் சீமானே!

# கண்ணால் பேசும் பெண்ணே

இ.தனிஷ்ரன்

“ஆதியும் அந்தமும்
இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும்...”

தொடக்கமும் முடிவும் இல்லாத கைலாசநாதனின் புகழ் அந்தாதி போல அடி முடி இல்லாத கைலாச விருட்சத்தின் வேர் காதல்.

“குமரிப் பெண்ணின் உள்ளத்திலே
குடியிருக்க நான் வர வேண்டும்
குடியிருக்க நான் வருவதென்றால்
வாடகை என்ன தர வேண்டும்”

என்று இவன் காதல் விண்ணப்பம் போட, விண் அப்பம் போன்ற பதுமையாள் மொழிந்தாள்,

“குமரிப்பெண்ணின் கைகளிலே
காதல் நெஞ்சைத் தரவேண்டும்
காதல் நெஞ்சைத் தந்துவிட்டு
குடியிருக்க நீ வரவேண்டும்”

இப்படி விண் அப்பம் இறங்கி வந்து காதல் விண்ணப்பம் எழுதாது, மனத் தெப்பம் தவழ காதல் கப்பம் கட்டாது கையொப்பம் இடம்மாற்றி சேர்ந்தவர்கள் இவர்கள்.

தரகர் வழி குறிப்புக்கொடுத்து பொருத்தம் பார்த்து, புகைப்படத்தில் முகம் பார்த்து பெரிய சம்பாசனைகள் எதுவுமில்லாது வீட்டுப் பெரியவர்கள் ஏற்பாட்டில் மணமேடையில் வந்தமர்ந்து, மந்திரம் ஓதி அக்னி குண்டம் சுற்றி தாலி கட்டி அம்மி மிதித்து அருந்ததி பார்த்து குங்குமம் தரித்து மாலை சூடி மணமக்களாய் காட்சி தந்து, இப்பொழுது முதலிரவு.

“ஆயிரம் இரவுகள் வருவதுண்டு
ஆனால் இதுதான் முதலிரவு
ஆயிரம் உறவுகள் வருவதுண்டு
ஆனால் இதுதான் முதல் உறவு”

முதலிரவில் முதல் அழைப்பு. கட்டிய தன் மனைவியை இப்படி அழைக்கிறான்,

//ஏய்! மாண்புறு மங்கையே!//

ஏய் இங்கே கொஞ்சம் திரும்பு! தலைவன் தலைவியை அழைக்கிறான். மனைவியின் மதிப்பறிந்த மணாளனின் அழைப்பு.

“என் மரியாதைக்கு உரியவளே
மனதிற்கு இனியவளே”



பேச்சு கொடுக்கிறான். பேச்சு தானே மானிட சமுதாயத்தின் இத்தனை பேராச்சரியங்களுக்கும் திறவுகோல். இவனும் தனக்கான உறவினை பேசச்சொல்லி வேண்டுகிறான்.

//செம்மாதுழை வாய் மொழி சொல்லாயோ//

அவள் பேசும் போது தேன் சிந்தும் சொற்கள். வாய்மொழி கேட்கையில் வரும் போதை இவனுக்கு தேவைப்படுகிறது.

“செங்கனி ஊறிய வாய் திறந்து
நீ ஒரு திருமொழி சொல்லாய்”

பேசடி சகியே பேசு!
காதல் - கவிதை, காமம் - கடவுள் அத்தனையும் காணப்போகும் உறவினை தொடங்குவதற்காக பேசு. அகரம் தொட்டு ழகரம் வரை மொழி முடிசூடும் கலை எல்லாம் பேச வேண்டுமே! பேசுதலே இன்பம். அவளோ,

“பௌர்ணமி நிலவில்
பனி விழும் இரவில்
கடற்கரை மணலில் இருப்போமா
மௌனத்தின் மொழியில்
மயக்கத்தின் நிலையில்
கதை கதையாக படிப்போமா”

என்று மௌனத்திலே உறவின் ஜீவனை மிக நெருக்கமாக தரிசிக்க விரும்புபவள். ஆனாலும் அவள் பேச்சின் இனிமையோ,

“தேன் ஊறும் வேர்ப்பலா
உன் சொல்லிலா”

வேரில் காய்க்கும் பலாப்பழத்தின் சுவை தண்டில் காய்க்கும் பலாப்பழத்தின் சுவையை விட அதிகம். அப்படியான வேர்ப்பலா சுளைகளை சுவைக்க முதல், அந்த சுளைகளை கொஞ்சி விழும் வார்த்தைகள் கேட்க ஆசை கொள்கிறான் இவன்.

“வலியா சுகமா தெரியவில்லை
சிறையா சிதையா புரியவில்லை”

என்ற காதல் போராட்டங்கள் காணாமல், மஞ்சத்தில் இரு நெஞ்சங்கள் கலக்க முதல் பேச வேண்டி நிலைக்கிறது மௌனம்.



“இதயம் ஒரு கண்ணாடி உனது பிம்பம் விழுந்ததடி
இது தான் உன் சொந்தம் இதயம் சொன்னதடி
கண்ணாடி விம்பம் கட்ட கயிறொன்றும் இல்லையடி
கண்ணாடி ஊஞ்சல் விம்பம் ஆடுதடி”

காதலனுக்கு காதலி ஆரம்பத்தில் தேவதையாக தெரிவாள். போக போக, மனக்கண்ணாடியில் அவள் விம்பம் தாண்டவம் ஆடத் தொடங்கும். இது உக்கிரமடைய சித்தமெல்லாம்

காதலி மயம். சுற்றமெல்லாம் காதலி முகம். சர்வமும் காதலின் மாயம்.

“இது சொர்க்கமா நரகமா சொல்லடி உள்ளபடி
நான் வாழ்வதும் விடை கொண்டு போவதும்
உன் வார்த்தையில் உள்ளதடி”

இப்படியான காதலின் ஏக்கத்தை, அவள் மௌனத்தில் மோகனத்தை இசைக்கும் போது உணர்கிறான். அதே வேளை அவனின் செல்லமான வேண்டுகோளை ஏற்று வாய்திறந்தாள் பவளமல்லி.

“மொட்டு ஒன்று மலர்ந்திட மறுக்கும் முட்டும் தென்றல் தட்டி தட்டி திறக்கும்
இது மலரின் தோல்வியா இல்லை காற்றின் வெற்றியா”

தோல்வி காதலர்களுக்கு இல்லை. இது காதலின் வெற்றி. உள்ளம் கொண்டவளின் மௌனம் ஆணின் உயிரை பிழியும் வல்லமை கொண்டது.

“ரஷ்யாவின் வொட்காவா
ஜப்பானின் ஹைக்கூவா”

அவள் பேச்சிலேயே கள் உண்ட மயக்கமும் நல்ல கவிதை படித்த நிறைவும் ஒரு சேர அடையும் காதலன், அவள் மௌனித்து விட்டால் அத்தனை புலன்களும் அடங்கி சுற்றும் அத்தனையும் இருண்டு சூனிய வெளிக்குள் சிக்கிச் சுழல்வான். காதலென்றாலே சொந்தச் செலவிலே சூனியம் வைப்பது தானே!

சூனியம், ஒன்றுமே இல்லாத நிலை. பூச்சிய வெளி. புலங்கள் ஒன்றை ஒன்று புறந்தள்ளும் நிலை. இங்கே காதலினால் ஈர்க்கப்பட்டு அதுவே உடல், பொருள், ஆவியாக நினைத்து அது ஒன்றே கதிமோட்சமென்று உருண்டு பிறழ்வது. அதுவே வாழ்வென்று விம்மி விம்மி கொண்டாடி செத்து மடிவது. அந்த சூனியம் வைத்த சூனியக்காரியே தேவியென்று, அவள் காலடியை நாளும் பொழுதும் தொழுவது.



“வசியக்காரி வசியக்காரி
வலைய வீசி போறாளே
வசியக்காரி வசியக்காரி
வளைச்சி போட்டு போறாளே”

காதலி பேச்சு மயக்கும் மாய மந்திரம். அது தரும் போதை இவனை கட்டும் வசியம். அவள் செய்த ஏவல் காதலெனும் வைப்பு. பில்லி வைத்த சூனியக்காரி அவள். விரும்பியே செய்வினை வாங்கிய பொம்மை இவன். மனம் விரும்பி மாந்திரீகத்தில் மாட்டிக்கொள்கிறான் சித்தம் கலங்கி தவிக்கிறான். நல்ல

சூனியக்காரியை சேர்த்துக்கொண்டு சூனியம் வைப்பது வரம். அவளால் அவனும் இவனால் இவளும் ஆசிர்வதிக்கப்படும் பெருவாழ்வு அது.

//ஏன் கலித்தொகை மொழியில் பாடுகிறாய்
ஏன் குறுந்தொகை தமிழை தேடுகிறாய்
என் பாமர மொழியில் பாடாயோ//

அவள் குரல் கொடுத்த வெறியில் காதல் பித்து தலைக்கேறி வசியம், செய்வினை என்று அவளுக்கு புரியாத கதைகளெல்லாம் பேசி சங்கத்தமிழில் அவள் மேல் பாசுரங்கள் கோர்க்கிறான்.

மானே! தேனே! மயிலே! குயிலே! மணிவிளக்கே! தேன்மலரே! பால்நிலவே!

இன்னும் பைத்தியம் முற்ற, சங்கத்தமிழும் சந்தத்தில் இணைகிறது.

நறுமுகையே! நீல ஆம்பலே! நன்நிலவே! வித்தாரக்கள்ளியே!

இவளுக்கு புரியவே இல்லை.

பழஞ்சோறே! பச்சை மிளகாயே! பாலாச்சுளையே! வறுத்த கச்சானே! புட்டே! முட்டைப்பொரியலே! ஆட்டிறைச்சிக்குழம்பே!

இது தானே இவன் வாழ்வாய் இருந்தது! இந்த பாமரனுடைய மொழி இது தானே! இவன் கவி பாடினாலும் இப்படித்தானே பாட வேண்டும்! இதென்ன? புரியாத சங்ககால தொகைகள் எல்லாம் இந்த பாமரன் நாவில் நர்த்தனம் ஆடுகிறது?

“காதலித்தால் கவிதை வரும் கண்டுகொண்டேன் பெண்ணாலே”

என்பது உண்மை தான் போல! என்று அவள் நினைக்க, இவனோ

//கண்கள் பார்த்தேன் கவி ஆனேன்
இன்னும் பார்த்தால் எங்கே போவேன்
உன்னாலே கம்பன் தாண்டுவேன்//

காதலில் மூழ்க, தமிழ் காதலனுக்குள் ஊறுகிறது. “கவி பாடு கள்வா” என்று அவள் கண் ஜாடை சொல்ல, அதுவும் எப்படியான கண்கள்?

//உன் வாட்டடங்கண் என்னை வாட்டுதடி//

வாட்டடங்கண் - நீண்ட வாள் போன்று பட்டொளி வீசும் கூரிய கண்கள்.

“வாட்டடங்கண் மாதே வளருதியோ வன்செவியோ நின்செவி தான்”



இறைவனின் பெருமையை மணிவாசகர் பாடிக்கொண்டி வீதி வழியே செல்லும் போது, மணிவாசகரின் தோழிப்பெண் தூ ங்கிக்கொண்டிருக்கிறாள். அப்படி தூங்கிக் கொண்டிருந்தவளின் கண்களைப் போல இவளுடைய கண்களும் ஒளி பொருந்தியவை. வாட்டடங்கண்.

//உன் வளைவுகளோ
என்னை வளைக்குதடி
உன் இதழ் மேலே எழுதுவேன்//

அவள் முன்னழகும் இடையழகும் பின்னழகும் அது கொண்ட நெழிவுகளும் வனப்பும் இவனை மதி மயங்கச் செய்கிறது. சற்று நேரத்தில், இவன் தொடப்போகும் பாவை உடலை இப்பொழுது காதல் அலைவரிசையில் கண்களால் அளக்கிறான். உதடுகளால் அளக்க ஒத்திகை பார்க்கிறான்.

தையலின் அழகு கொடுக்கும் போதையினால் கம்பனையும் தாண்டி பிரவாகம் எடுத்த கற்பனை ஊற்று, சங்கத்தமிழோடு சரசம் புரிந்து புனைந்த கவிதைகளை எங்கே எழுதித் தீர்ப்பது? இதழ்களில்!



“இதழில் கதை எழுதும் நேரமிது
இன்பங்கள் அழைக்குது ஆ ஆ ஆ”

அவன் மன்மத பேச்சில் மயங்கிய இவளும்,

//உந்தன் சேவை
இவள் செய்யும் போது
என் தேவை அது தீருமே
என் வாழ்வே மாறுமே//

காதல் காய்ந்து கனிந்து வாசம் வீசும் போது, காதல் கொண்ட கன்னி காதலனுடன் ஊடல் கண்டு பின் கட்டிலில் கூடுகிறாள்.

இவர்களோ, கட்டிலில் கூடிப் பின் காதலிக்கப்போகிறவர்கள். இப்படியாக, இல்லற இணைப்பில் தன்னவனுக்கு காதல் சேவை செய்து அதில் தனக்கான இன்பத்தை பெற்றுக் கொள்வேன் என்கிறாள் இவள்.

சிந்திய வெண்மணிகளெல்லாம் சிப்பியில் முத்தாக, நங்கை தாய் என பதவி உயர்வு பெறுகிறாள். வாழ்வே மாறுகிறது. தலைவனிடம் பாயானதன் இன்பத்தொடர்ச்சி. அதற்கான அரங்கேற்றம் இப்பொழுது,

//தம்தர தம்தர
கண்கள் சொந்தம் சொல்ல
தம்தர தம்தர
கண்கள் சொந்தம் சொல்ல
இதயத்தின் மொழியால்
இப்போது எழுதுங்கள் பல்லவியை//

# பிளவுபட்ட உதடு மற்றும் அண்ணம்

## [Cleft Lip and palate]

*சஜீவன் சத்தியசீலன்*
*பல்மருத்துவ பீடம்*
*பேராதனைப் பல்கலைக்கழகம்*

### சிகிச்சை முறைகள்
### [Treatment methods]

பிளவு பட்ட உதடு மற்றும் அண்ண த்துடன் பிறந்த குழந்தைக்கு சிகிச்சை பூரணமாகும் வரையில் சில சவால்கள் இருப்பதனால் குழந்தையின் வெவ்வேறு நிலைமைகளை கவனிப்பதற்கு வைத்திய நிபுணர் குழு ஒன்று உள்ளது. இந்த குழுவில் உள்ளவர்கள் ஒரு அணியாக செயற்படுவார்கள்.

குழந்தை நோய் நிபுணர் [Paediatrician], வாய் , தாடை மற்றும் முக சத்திர சிகிச்சை நிபுணர் [OMF surgeon] , பல் வைத்தியர் [Dental Surgeon], Cleft surgeon , போசணை நிபுணர் [Nutritionist], பல் சீராக்கல் சிகிச்சை நிபுணர் [Orthodontist], காது , மூக்கு மற்றும் தொண்டை நிபுணர் [ENT surgeon], பேச்சு மற்றும் மொழி சிகிச்சை நிபுணர் [Speech and language therapist], தாதியர்கள் [Nursing staffs] போன்ற பலர் இக்குழுவில் உள்ளடங்குவார்கள்.



உதடு அல்லது அண்ணப்பிளவுள்ள குழந்தைகள் பிறந்து ஒன்று அல்லது இரண்டு வாரங்களில் வாய், தாடை மற்றும் முக சத்திர சிகிச்சை நிபுணர் ஒருவரை சந்திக்கவேண்டும். குழந்தையின் கண்காணிப்பும் பராமரிப்பும் பிறந்ததிலிருந்து ஆரம்பிக்கப்பட்டு 20 வயது வரை நீடிக்கப்படுகின்றது. புதிதாகப் பிறந்த குழந்தைகளின் பிளவுகள் வித்தியாசப்படுவதால், அறுவைச் சிகிச்சை முறைகளும் மாறுபடும்.

பிளவு பட்ட உதட்டுடன் பிறந்த குழந்தையின் பெற்றோர் தங்கள் குழந்தையினை முதல் தடவை பார்த்தவுடன் மன வேதனையடைவது இயல்பான விடயமாகும். எனினும் இதனை முற்றாக சரி செய்ய முடியும் என்பது மகிழ்ச்சி தரக் கூடிய ஒரு விடயமாகும். மேலும் இக்குழந்தையின் பராமரிப்பு மற்றும் சிகிச்சை முறைகளை பற்றி பெற்றோருக்கு தெளிவுப்படுத்துவது முக்கியமான ஒரு விடயமாகும். பிளவுபட்ட அண்ணத்துடன் பிறந்த குழந்தைகளுக்கு பாலூட்டும் பொழுது பால் மூக்கினுள் செல்லலக்கூடும். பால் ஊட்டுவதினை சரி செய்வதற்கு feeding plates வழங்கப்படும். அறுவைச்சிகிச்சை செய்வதற்கு முதல் அறுவைச்சிகிச்சையினை இல குவாக்குவதற்காக சில சிகிச்சை


முறைகள் மேற்கொள்ளப்படும் [Presurgical orthopaedics].

அதன் பின்பு பிளவுபட்ட உதட்டினை சரி செய்வதற்கான அறுவைசிகிச்சை பிறந்து மூன்று மாதம்[10 weeks] தொடக்கம் 6 மாதங்களினுள் செய்யப்படும். இச்சிகிச்சை செய்வதற்கு குழந்தை 10 pounds [4.5kg] நிறையினை கொண்டு இருத்தல் வேண்டும், அத்துடன் குழந்தையினுடைய கீமோகுளோபின் [Haemoglobin] அளவானது 10% ஆக இருத்தல் வேண்டும். அதன் பின்பு அண்ணப்பிளவினை சரி செய்வதற்கான அறுவைச் சிகிச்சை பிறந்து 9-12 மாதங்களில் செய்யப்படும்.

பிளவு பட்ட அண்ணம் சரி செய்த பின்பு குழந்தைக்கு பேச்சு மற்றும் மொழி பயிற்சி (Speech and language theraphy) மேற்கொள்ளப்படும். ஊத்தேகியாவின் குழாயின் [Eustachian canal] நிலை மாறி இருப்பதினால் காதில் நோய்த் தொற்றுக்கள் ஏற்படக்கூடும். இதனால் ENT பரிசோதனை அவசியமாகும்.

முன்பு செய்த உதட்டினை சீர்செய்யும் சிகிச்சையின் பின்பு வடுக்கள் ஏதும் இருப்பின் அதனை திருத்தியமைக்கும் அறுவைச் சிகிச்சையானது [Revisional surgery] அடுத்ததாக மேற்கொள்ளப்படும்.

ஒன்பது வயது ஆனவுடன் SABG-secondary alveolar bone grafting என்கின்ற அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்படும். அதன் பின்பு (11-13) வயதினில் பல் சீராக்கும் சிகிச்சை ஆரம்பிக்கப்படும்.



## குழந்தையின் போசாக்கு

பிறந்த குழந்தைக்கு போசணை யானது தாய்ப்பால் மூலம் மட்டுமே கிடைக்கின்றது. வாயினை சுற்றியும் தொண்டையிலும் உள்ள தசைகளின் இசைவான செயற்பாடுகளினால் குழந்தைகள் பால் பருகும் போது எதிர் அமுக்கம் [Negative pressure] உருவாக்கப்படும். குழந்தைகள் பாலினை உறிஞ்சி குடிப்பதற்கு உதடுகள் நன்றாக ஒட்டிப்பிடிப்பது அவசியமாகும். பிளவுபட்ட உதடுகளினால் இறுக்க கவ்விப் பிடித்து எதிர் அமுக்கத்தினை உருவாக்கி பாலினை அருந்த முடியாது.

பிளவுபட்ட உதடு மற்றும் அண்ணத்துடன் பிறந்த குழந்தைகளுக்கு பாலூட்டுவதற்கு சிறப்பான பால் புட்டிகள், பாலூட்டும் முறைகளும் உள்ளன.

தொடர்வோம்.....

தொண்டரடிப்பொடியன்



கப்பச்சினோ கதைகள்

4

# வெள்ளைக் காதல்

தனது மனைவிக்கு துணையாக இருக்கும் தனது பொறுப்பை கிரகித்து கொள்ள இளவரசர் ஃபிலிப்பிற்கு சிறிது காலம் தேவைப்பட்டது.

1956ஆம் ஆண்டில் தொலைதூர காமன்வெல்த் நாடுகளுக்கு இளவரசர் ஃபிலிப் பயணம் மேற்கொண்டார். இது அவர் தனது மனைவிக்கு துணையாக இருக்கும் கடமை குறித்த கேள்விகளை எழுப்பியது.



இருப்பினும் இந்த தம்பதி தங்களின் பொறுப்புகளுக்கேற்ப, ஒரு முறையை வகுத்துக் கொண்டு அதை அடுத்த பல தசாப்தங்களுக்குத் தொடர்ந்து கடைப்பிடித்தனர்.

அரசின் தலைவராக அரசி தனது கடமையை ஆற்ற, குடும்பத் தலைவராக இளவரசர் ஃபிலிப் தனது கடமையை ஆற்றினார். வெளி உலகத்திற்கு அரசிதான்



முதன்மையானவர். ஆனால் தனிப்பட்ட முறையில் இளவரசர்தான் முதன்மையானவர். 1960களின் அரச குடும்பம் குறித்த ஆவணப்படத்தில் விருந்தின் பொறுப்பை இளவரசர் ஃபிலிப் ஏற்றுக் கொண்டிருப்பார். ராணி சுத்தம் செய்வதற்கான பொறுப்புகளை ஏற்றுக் கொண்டிருப்பார்.

பெரிய தேசிய நிகழ்வுகள், வெளிநாட்டு பயணங்கள், நாடாளுமன்ற தொடங்கங்கள், ஆண்டுவிழா, நன்றி





உரை நிகழ்ச்சிகள் ஆகியவற்றிற்கு ராணியுடன் செல்வார் இளவரசர் ஃ. பிலிப். இது குறித்த வீடியோக்களை நீங்கள் பார்த்தால், இருவரும் சிறிய தருணத்தில் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்வதை காணலாம். ஒரு சின்ன சிரிப்பை பகிர்ந்து கொள்வார்கள். ஒரு பொதுவெளி நிகழ்ச்சியில் தனிப்பட்ட ஒரு நிகழ்வாக அது இருக்கும்.

பெரும்பாலும் இளவரசர் ஃ.பிலிப் கூட்டத்தினரிடையே அல்லது விருந்தினர்களிடையே உற்சாகமாக பேசி அரசியின் வருகைக்கு வழி செய்வார்.

இந்த தம்பதிக்கு வெவ்வேறு துறையில் ஆர்வங்கள் இருந்தன. ஒருமுறை இளவரசர், ”மகிழ்ச்சியான



திருமண வாழ்க்கையின் ரகசியம் இருவருக்கும் வெவ்வேறு விஷயங்களில் ஆர்வங்கள் இருப்பது” என தெரிவித்திருந்தார்.

அரசிக்கு நாய்கள் மற்றும் குதிரைகள் என்றால் விருப்பம் அதிகம். எனவே அது தொடர்பான விஷயங்களில் தனது ஓய்வு நேரத்தை செலவழிப்பார். இளவரசர் ஃ.பிலிப் வாழ்நாள் முழுவதும் விளையாட்டுக்களில் ஆர்வமுடையவராக காணப்பட்டார். பின்நாட்களில் அவர் சாரட் பூட்டிய குதிரைகளை ஓட்டும் விளையாட்டில் ஈடுபட்டதை நாம் காணலாம்.



“நதியில் நீந்தும் மீனை போன்று எனது தாத்தா அவர் விரும்பியதை செய்து கொண்டிருந்தாலும், அவர் இல்லாமல் அரசியால் ஒன்றும் செய்ய இயலாது” என 2012ஆம் ஆண்டு இளவரசர் ஹாரி தெரிவித்திருந்தார்.

இறுதியாக “தன்னால் இயன்றதை செய்த பிறகு” 2017ஆம் ஆண்டு தனது சேவையிலிருந்து ஓய்வுப் பெற்றார் இளவரசர் ஃ.பிலிப். இதன் பொருள் அரசி தனது அதிகாரபூர்வ கடமைகளை செய்யும்போது அவரை



தனியாகவோ அல்லது குடும்ப உறுப்பினர்களில் வேறு யாருடனோ காணலாம் என்பதுதான். 2020ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை நார்ஃ போக்கில் உள்ள சண்ட்ரிங்க்ஹாம் எஸ்டேட்டில் இந்த தம்பதியை அதிகமாக பார்த்திருக்கலாம்.

இருப்பினும் கோவிட் தொற்று காலத்தில், வின்சர் கோட்டையில் சிறிய பணியாளர்கள் குழுவுடன் அவர்களை பாதுகாப்பாக தங்க வைக்க முடிவு செய்யப்பட்டது. அதை ஹெச்எம்எஸ் பபள் என்று அழைத்தனர்.

பெருந்தொற்று காலத்தில் இருவரும் ஒன்றாக அதிக நேரத்தை செலவிட்டனர். கோட்டைச்சுவர்களுக்குள் அவர்கள் தங்களது வாழ்க்கை பயணத்தில்



பார்த்த, அனுபவித்த அசாதாரண விஷயங்களை மீண்டும் கண்முன் கொண்டு வந்திருக்கலாம்.

70 வருடங்களுக்கு மேல், ஒருவருக்கு ஒருவர் துணையாக இருந்த இந்த தம்பதி தங்களது காதலை பெரிதும் வெளியில் வெளிப்படையாக காட்டிக் கொள்ளவில்லை என்றாலும், அவர்கள் காதல் கதை என்றும் நினைவில் வைத்துக் கொள்ளக்கூடிய நீடித்த ஒரு அரச குடும்ப காதல் கதை என்றால் மிகையில்லை.



அந்தக்காதல் கதையின் வாழும் சாட்சியாக கண்களில் நீர் நிறைய எலிசபெத் அந்த கதிரையில் இறுக்கத்துடன் இருக்கிறார். அவர் கண்ணெதிரே கண்ணுக்கு கண்ணாக இருந்த அவர் கணவர் உடல் புதைக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது! அந்தக் கல்லறையில் எழுதிவிடுங்கள்!

**‘கற்பு நிறை காதலன்**
**ஒருவன் இங்கே**
**உறங்கிக்கொண்டிருக்கிறான்... ’**

**இப்படிக்கு,**
**சாவித்துணை**

சிந்தனைக்கினிய
# கந்தபுராணம்

அதிரன்

3

ஆலய கும்பாபிஷேகக் கிரியைகளில் ஆகாயச் சூரியனிலிருந்து "சூரியாக்கினி" என்ற நெருப்புப் பெறப்படுகிறது. அந்த அக்கினி மண்ணில் உள்ள குண்டத்தில் ஸ்தாபிக்கப்பட்டு வாயுவின் துணையுடன் வளர்க்கப்பெறுகிறது பின், அதனை கும்ப ஜலத்தில் இணைத்து வழிபாடாற்றுவதுடன், இறுதியில் இறை திருவுருவத்தில் நீரால் அபிஷேகித்து இறைசாந்த நித்யம் உண்டாகப் பிரார்த்திக்கப்படுகிறது. இதைப் பஞ்சபூதங்கள் இணைந்து செயல்படும் நிகழ்வோடு இணைத்து நோக்கலாம்.

இந்த இடத்தில் "ஒருதிரு முருகன் வந்து உதித்தனன்" என்று கச்சியப்பர் குறிப்பிடுவார். அதாவது என்றுமுள்ள இறைவன் இந்த வேளையில் முருகனாக உதித்தனன். (காலையில் சூரியன் பிறப்பதில்லை. உதிக்கிறான். ஏனெனில், அவன் முன்னரே இருப்பவன்.)

### போரும் சீரும்

போருக்கு முன் இரு முறை தூதனுப்பியமை, மறைந்து நின்று போராடாமை, ஆயுதம் ஏந்தாதவனுடன் போராடாமை, தனக்குச் சமானமற்ற வீரனுடன் போராடாமை, புறங் கொடுப்பவனைக் கொல்லாமை ஆகிய செயற்பாடுகள் கந்தபுராணத்திலுள்ள போரில் "அசுரர்களால் கூட" யுத்த தருமங்கள் அநேகமாகக் கடைபிடிக்கப்படுவதைப் பார்க்கிறோம். செஞ்சோற்றுக்கடனுக்குச் சிங்கனும், பிதிர்க்கடனுக்கு இரணியனும், மானத்திற்குச் சூரனும், கற்பிற்கு சூரன் மனைவியும் கந்தபுராணத்தில் எடுத்துக்காட்டுகளாக விளங்குகின்றனர்.

ஆனால், இன்றைய உலகில் நடைபெற்ற, நடைபெறும் மோதல்கள் இவற்றை எல்லாம் புறக்கணிக்கிறது. இவையெல்லாம் நிச்சயமாக இன்றைய சமூகத்தைக் காட்டிலும் கந்தபுராண காலச் சமூகம் உள, ஒழுக்க ரீதியில் உயர்வானதாகவே இருந்திருக்கும் என நம்பச் செய்கின்றன.

கந்தபுராணம் என்பது தமிழரின் வாழ்வோடு இணைந்தது. ஆக, இதில் ஊறிய எவரும் இதைக் கதை என்று சொல்வதில்லை. சிற்சில இடங்களில் கதைக்குரிய உயர்வு நவிற்சி இருந்தாலும், இது பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் உண்மையில் நடந்த சம்பவம் என்றே அவர்கள் நம்புகிறார்கள். இவ்வாறான ஆய்வுகளின் படி முருகன் பிறந்தது கைலாசச் சாரல் என்றும், தரை வழி



@ramesstudios



யுத்தம் நடந்தது திருப்பரங்குன்றம் என்றும், விண் வெளி யுத்தம் நடந்தது திருப்போஷரூர் என்றும், கடல் வழிச் சமர் நடந்தது திருச்செந்தூருக்கு அப்பாலுள்ள கடல் என்றும் ஐதீகம். இலங்கையின் கதிர்காமத்தில் படைவீடு அமைத்துத் தங்கி, அப்பால் தெற்கே சூரனுடைய நகரை நோக்கிச் சென்றதாகக் கூறப்படுவதால் சூரன் அக்கால ஆபிரிக்க தேச அரசன் என்று கருதுவாரும் உள்ளனர். முருகனின் வலது புறம் எழுந்தருளியிருக்கும் வள்ளியம்மை தமிழ் மொழி பேசும் குறவர் இனப் பெண் என்பது வேறு ஐதீகம். இதுவும் ஆய்விற்குரியதே.

யாழ்ப்பாணத்தின் கடற்கரை யோரத்தில் உள்ள பிரபல ஸ்கந்த தலமான மாவிட்டபுரத்திற்கும் திருச் செந்தூருக்கும் இடைப்பட்ட பரந்த சமுத்திரப் பகுதியில் மாமரமாகி மாயா ஜாலங்கள் செய்து முருகனுடன் சூரன் போராடியிருக்கிறான்.

***‘தீயவை புரிந்தாரேனும் குமரவேள் திருமுன் உற்றால்***
***தூயவராகி மேலைத் தொல்கதி அடைவர்.’***

என்ற கந்தபுராண அறைகூவல் எங்கள் ஒவ்வொருவரையும் தட்டி எழுப்பி “ஓ” அஞ்ஞானிகளே, கடந்த காலம் போனது. உங்கள் அறியாமை மூட்டைகளை நீக்க நல்ல ஒரு வழி கிடைத்திருக்கிறது. உடனடியாகக் கந்தப்பெருமானின் கழலடிகளைப் போய்ச் சேருங்கள். நீங்கள் ஞானியராவீர்கள்...” என்று நமக்கெல்லாம் அரிய பெரிய நற்செய்தி சொல்கிறது.


## நீங்களும் இணையலாம்!!!

- எழுத்துத்துறையில் ஆர்வமுள்ளவரா?
- புகைப்படங்கள் எடுப்பதில் பிரியமுள்ளவரா?
- ஓவியங்கள் வரைதலில் முனைப்பானவரா?
- பத்திரிகை வடிவமைப்பில் நாட்டமுள்ளவரா?

**thumi2016@gmail.com**

துமி மின்னிதழில் இணைந்து பணியாற்ற அன்புடன் அழைக்கிறோம். மேற்குறித்த மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

# அந்திமக் காலம்

பசிக்கிறது
சேர்த்துவைத்த பணக்கட்டுகள்
பசியாற்றவில்லை
பணமிருந்தும் கையேந்துகிறேன்
என்னிடம் எந்தவொரு
அறுவடையுமில்லை

எம் ஆடம்பரங்கள் மெல்லச்
செத்துப்போவதை
நீங்கள் கவனித்தீர்களா
அன்பர்களே?
என் மதமும் கல்வியும் புகட்டிய
எளிமையை
எனக்கு பயிற்ச்சியாய் கற்றுத்தரும்
காலமிதுவோ?

அன்போடு அனைத்து உறவாடிய
என் தோழமைகள் எங்கே?

கடைசியாய் அவர்களைச் சந்தித்த
போது
இறுதியாய் ஒருமுறை
கட்டியணைத்து
அன்பைப் பறிமாற்றிக் கொள்ள
ஏன் என் நெஞ்சம் மறந்தது?

நாலா பக்கமும் பற்றியெரியும் ஒரு
காட்டில்
சிக்கிய அனுபவமுண்டா தோழா?
பற்றியெரியும் காட்டில்தான்
இப்போது
நீயும் நானும் நிற்கின்றோம்

நெருங்கிவர அவகாசம் தந்திருந்த
என் காதல் எங்கே?



கையிருப்பிலிருந்த கால
அவகாசங்கள்
காலவதியாகிற்று - தள்ளியே
இருப்போம்.

சேர்ந்தே இருத்தல் நேசமென்றிருந்த
காலம்
எங்கே போய் மறைந்தது?
பிரிந்தே இருத்தல் நலம்
என்கின்றனரே!

வீடுகளிலே முடங்கிப் போனோம்
என வருந்துகிறீர்கள்- இல்லை இது
மற்றொரு வாய்ப்பு
குடும்பத்தோடு அன்பைப்
பகிர்ந்துகொள்ளுங்கள்

பைய நம்மை வந்துசேரப்போகிறது
நம் அந்திமக்காலம்
சேயைத்தாய் விட்டுவிடும் காலமும்
தாயைவிட்டு சேய் ஓடும் காலமும்
இதுவே

உறவுகளைக்கண்டு விரண்டோடும்
ஊழியும் அதுவே
கூட்டமாய் புற்றீசலாய் செத்துமடியும்
அந்திமக்காலமும் இதுவே
சூன்யமாய் நம்மைச் சூழ்ந்த
துன்பம்
ஓர் நாள் விட்டுவிலகும்

அதுவரை
அன்பாய்,
அன்போடு,
தூரங்களால் தொலைவாகி,
நெஞ்சங்களால் நெருங்கி,
வாழ்வோம்.

ருஸ்னா நவாஸ்
(மாவனல்லை)






# புதிர் 08
# யார் மாப்பிள்ளை?

சினமிகா



நள்ளிரவு வேளையில் அடர்ந்த காட்டில் ஓநாய்களும், பேய்களும் எழுப்பும் சத்தங்களைக் கேட்டு சிறிதும் அஞ்சாமல், வேதாளத்தை சுமந்து நடந்து கொண்டிருந்த விக்ரமாதித்தனிடம் அந்த வேதாளம் ஒரு கதை சொல்ல ஆரம்பித்தது.


ஒரு முறை சந்திரசேனன் என்ற மன்னன் நாகபுரி என்ற நாட்டை ஆண்டு வந்தான். அவனுக்கு ரூபவதி என்ற மகளிருந்தாள். இளவரசியான ரூபவதி திருமண வயதை எட்டியதும் அவளுக்கேற்ற ஒரு இளவரசனை அவளுக்கு திருமணம் செய்து வைக்க தேடிக்கொண்டிருந்தார் அவளது தந்தை. இதையறிந்த ரூபவதி தன் தந்தை தேர்ந்தெடுக்கும் இளவரசனை தான் திருமணம் செய்து கொள்ள முடியாதென்றும், மாறாக எந்த இளவரசன் அவனது திறமையை தன்னிடம் நிரூபிக்கின்றானோ, அந்த இளவரசனையே தாம் திருமணம் செய்து கொள்ளப்போவதாக திட்ட வட்டமாக கூறிவிட்டாள். அவளின் முடிவை ஏற்ற அவளின் தந்தையும் மற்ற நாட்டு இளவரசர்களுக்கு தன் மகளின் சுயம்வரத்தில் பங்கேற்குமாறு அழைப்பு விடுத்தார்.

அந்த சுயம்வரத்தில் "உபேந்திரன், யோகேந்திரன், தனஞ்செயன்" என்ற மூன்று வேறு வேறு நாடுகளைச் சேர்ந்த இளவரசர்கள் கலந்து கொண்டார்கள். அதில் முதலில் உபேந்திரன் ரூபாவதியிடம் சென்று தனக்கு எந்த ஒரு விஷயத்திலும் அதன் கடந்த காலம், நிகழ் காலம், எதிர் காலத்தை அறியக்கூடிய திறன் இருப்பதாக கூறினான். இரண்டாவதாக வந்த யோகேந்திரன் தன்னிடம் தான் தயாரித்த அற்புதமான ரதம் ஒன்று இருப்பதாகவும், அது நிலம், நீர், ஆகாயம் என மூன்று வழிகளிலும் பயணம் செய்யக்கூடியது என்று கூறினான். மூன்றாவதாக வந்த தனஞ்செயன் தான் உருவாக்கிய "அற்புத வாள்" ஒன்று தன்னிடம் இருப்பதாகவும், அதை கொண்டு சண்டையிடும் போது எதிராளிக்கு மரணம் நிச்சயம் என கூறினான். இதையெல்லாம் கேட்ட ரூபவதி அந்த மூவரில் தான் திருமணம்

செய்து கொள்ள விரும்புவது யார்? என்பதை மறுநாள் கூறுவதாக கூறி அந்தப்புரம் சென்றாள்.


மறுநாள் எல்லோரும் அரசவையில் ரூபவதி வருகைக்காக காத்திருந்தனர். ஆனால் ரூபவதி அரண்மனையில் இல்லை என்ற செய்தி வந்தது. அப்போது இளவரசன் உபேந்திரன் தன் முக்கால ஞானத் திறனைக் கொண்டு ரூபவதி சில அரக்கர்களால் கடத்தப்பட்டு, யாருமே எளிதில் செல்ல முடியாத ஒரு மலையுச்சியில் சிறை வைக்கப்பட்டிருப்பதாக கூறி, அங்கு செல்வதற்கான வரைபடத்தையும் வரைந்து கொடுத்தான். இதைக் கேட்ட யோகேந்திரன் தன்னுடைய அதிசய ரதத்தின் மூலம் யாருமே செல்ல முடியாத அந்த மலைக்கோட்டைக்கு செல்ல முடியும் என்று கூறினான். மூவரும் அந்த மலைக்கோட்டைக்கு பறந்து சென்றனர். அப்போது அங்கிருந்த அரக்கர்கள் இந்த மூன்று இளவரசர்களையும் தாக்க முற்பட்டனர். அப்போது இளவரசன் தனஞ்ஜெயன், தன்னிடம் இருந்த அற்புத வாளைக்கொண்டு அந்த அரக்கர்களுடன் சண்டையிட்டு, அவர்களைக் கொன்று அங்கு சிறை வைக்கப்பட்ட ரூபவதியை மீட்டான்.

இப்போது அம்மூன்று இளவரசர்களும் ஆளாளுக்கு தங்களுடைய திறனால் தான் இளவரசி ரூபவதி மீட்கப்பட்டதாக கூறி, அவர்கள் மூவரும் தங்களுக்கு தான் ரூபவதியை திருமணம் செய்யும் உரிமையுள்ளது என ஒரே நேரத்தில் உரிமை கோரினர். இதற்கொரு முடிவு காண எண்ணிய ரூபவதி பின்வரும் புதிரை தொடுத்தாள். சரியான பதிலை முதலில் அளிப்பவரை மணந்து கொள்வதாக வாக்களித்தாள்.




மேலுள்ள சிக்கலைத் தீர்க்க நீங்கள் 1 முதல் 9 வரையிலான இலக்கங்களை புள்ளிகளுக்குப் பதிலாக மாற்றியமைக்க வேண்டும். இவ்வாறு செய்யும் போது உண்மையான ஒரு கணித சிக்கல் உருவாக்கப்படும். பூச்சியங்கள் பயன்படுத்தலாகாது மற்றும் ஒவ்வொரு இலக்கமும் ஒரு முறை மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். விக்ரமாதித்தனே இப்பொழுது உம்முடைய நேரம் என்று முடித்தது வேதாளம். தூமி அன்பர்களே இச் சிக்கலைத் தீர்க்க நீங்களும் மன்னனுக்கு உதவிடுங்கள்.

## புதிர் 07 - விடைகள்



தமிழ் நாவல் இலக்கிய வரலாற்றில்

# கமலாம்பாள் சரித்திரத்தின் முக்கியத்துவம்

3

முருகையா சதீஸ்
தமிழ்த்துறை
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்

## கதைச்சுருக்கம்

மதுரை மாவட்டம் சிறுகுளம் என்ற கிராமத்தில் வசிப்பவர் முத்துஸ்வாமிஐயர். இவரின் மனைவி கமலாம்பாள். இவர்களுக்கு கல்யாணி என்ற மகள் உண்டு. முத்துஸ்வாமி ஐயரின் தம்பி சுப்பிரமணிய ஐயர். இவரின் மனைவி பொன்னம்மாள். இவர்களுக்குச் சுந்தரம் என்ற மகனுண்டு. அவன் அம்மாவை விடப் பெரியம்மா மீதே அதிக பாசம் கொண்டிருந்தான். கூட்டுக்குடும்பமாக இருந்த இவர்களின் குடும்பம் பெரும்பாலும் வெளியுலகத் தொடர்புகள் இல்லாமல் இருந்தது. நிலவுடைமை அமைப்பு மாறிவரும் காலத்தில் இவர்களின் கூட்டுக்குடும்பம் உள்முரண்பாடுகளால் சிதைவு அடைகின்றது. முத்துஸ்வாமி ஐயர் தனது மகள் கல்யாணியைச் சென்னையில் இருக்கும் ஸ்ரீநிவாசனுக்கு மணம் பேசி முடிக்கின்றார்.



பொன்னம்மாள் கலகத்தை உருவாக்கும் வம்பர் சபைத் தலைவி. இவள் கல்யாணியைத் தன் தம்பி மகன் வைத்தியநாதனுக்குத் திரு மணம் செய்து வைக்க விரும்பிய நிலையில் திட்டம் கைநழுவிப் போனதில் ஆத்திரமடைந்து கண வனை நிச்சயதார்த்தத்திற்குப் போக விடாமல் தடுக்கிறார். திருமணம் ஊரே புகழும்படியாக நடக்கிறது.

சில நாட்களுக்குப் பிறகு கமலாம்பாள் ஓர் ஆண்குழந்தையைப் பெற்றெடுக்கிறாள். நடராஜன் என்று பெயர் வைக்கின்றனர். இதற்கிடையில் பிரபலத்திருடனான பேயாண்டித் தேவன் சுப்பிரமணிய ஐயரின் வீட்டில் நுழைந்து நகைகளையும், ஜல்லிக்கட்டுக் காளையையும் கள வாடிச் செல்கின்றான். சுப்பிரமணிய ஐயரின் மனைவி வசிய மருந்திற்குக் கட்டுப்பட்டுப் பேயாண்டித்தேவனுக்குச் சார்பாகச் சாட்சி சொல்கிறாள். இதனால் முத்துஸ்வாமி ஐயர் அவனைக் காவல்துறையிடம் பிடித்துக்கொடுத்தும் பலன் இல்லாமல், பேயாண்டித்தேவன் விடுதலை

செய்யப்படுகின்றான்.
விடுதலையாகி வந்தவன் முத்துஸ்வாமி ஐயரின் இரண்டு வயதுக் குழந்தையைக் கடத்திக் கொண்டு போய் ராமசேஷ ஐயருக்கு விற்றுவிடுகின்றான்.
இதனால் முத்துஸ்வாமி ஐயரின் குடும்பம் நிம்மதி இழக்கிறது.




மகளுடன் சென்னையில் வசிப்பதற்கு முத்துஸ்வாமி ஐயரும், கமலாம்பாளும் குடிபெயர்கின்றனர்.
சுப்பிரமணிய ஐயரின் உடல்நலம் பாதிக்கப்படுகின்றது. இதனால் ஊர் திரும்பிய அண்ணனிடம் மன்னிப்புக் கேட்டபடி சுப்பிரமணிய ஐயர் இறந்துவிடுகின்றார். இதற்கிடையில் பம்பாய் வியாபாரத்தில் முதலிட்டு முத்துஸ்வாமி ஐயர் ஏமாற்றமடைந்தார். இதனால் உலக வாழ்க்கையை வெறுத்தார். நிம்மதியைத் தேடி அலைகின்றார். பொன்னம்மாள் தன் வம்பர் சபையுடன் சேர்ந்து கமலாம்பாள் மீது பழியைக் கூறி முத்துஸ்வாமி ஐயரைப் பிரிக்கிறாள். முத்துஸ்வாமி ஐயர் தற்கொலை செய்துகொள்ள முயற்சி செய்யும் போது இறையனுபவத்தைப் பெறுகின்றார்.


சச்சிதானந்த ஸ்வாமிகள் இவருக்குக் குருவாக வந்து சேருகின்றார். இவர்கள் இருவரும் காசிக்குச் செல்லுகின்றனர். சுப்பிரமணிய ஐயரின் இறப்பு பொன்னம்மாளைச் சித்தம் கலங்க வைக்கிறது. தான் செய்த துரோகத்தை வைத்தியநாத ஐயரிடம் கூறி, முத்துஸ்வாமி ஐயரிடம் மன்னிப்புக் கேட்கக் காசிக்குச் செல்லுகின்றனர்.
இறுதில் மனம் திருந்திய பேயாண்டித் தேவனும், நடராஜனுடன் காசிக்கு வந்தடைகிறான்.

அனைவரும் ஒன்று சேருகின்றனர். பல்வேறு துன்பங்களுக்கிடையில் முத்துஸ்வாமி ஐயர் சிற்றின்பத்திலிருந்து பிரமானந்தத்தை அடைந்த வரலாறு தான் கமலாம்பாள் சரித்திரம். இவரின் ஞானமார்க்க சிந்தனையின் ஆத்மீகநாட்டம் நாவலின் பிற்பகுதியைக் கனவு போல மாற்றிவிட்டது.

## கதையமைப்பில் சிறப்புத்தன்மை

கமலாம்பாள் சரித்திரம் கதையமைப்பில் மிகுந்த தனித்தன்மை கொண்டது. இன்றுவரையும் கருவினால் இதனோடு பேசக்கூடிய மற்றொரு நாவல் எழுதப்படவில்லை. மானுட வாழ்வில் நிலையற்ற, அமைதியற்ற ஆன்மா அலைந்து திரிந்து இறைவனை அடைந்து அடங்குகின்றது. பொறுமையும், அமைதியும் பிரமானந்தத்தினைத் தருகின்றன. இதை எளிய நடையில் முற்றிலும் சமகால வாழ்வின் சிக்கல்களாலும் மெலிதான நகைச்சுவை மற்றும் கதைப் பின்னலாலும் தந்துள்ளார்.

ஆய்வு தொடரும்...






சரியான விடைகளை
அனுப்ப வேண்டிய முகவரி
www.thumi.org
thumi2016@gmail.com
www.facebook.com/Thumi06

## இடமிருந்து வலம்

1- எட்டுத் தொகை ஏடுகளில் ஒன்று
5- தென்னிந்தியாவிலுள்ள ஒரு யாத்திரைத் தலம்
7- நீரில் மலரும் ஒரு பூ (குழம்பி)
9- சிலப்பதிகார காப்பியத்தின் உட்பிரிவு (திரும்பி)
10- இது ஒரு குரங்கைப் போன்றது என்பர். (குழம்பி)
12- கல்லில் செய்யப்படுவது.
14- சிற்றரசர்கள் பேரரசுக்கு வழங்குவது (குழம்பி)
16- நாட்டை ஆளும் ஓர் உயரிய பதவி (குழம்பி)
17- கண்ணுக்கு இது அழகாம்.
18- மாடு மேய்ப்பவர்களை இப்படி அழைப்பர்.
19- விவாதம் என்றும் சொல்லலாம்.

## மேலிருந்து கீழ்

1- ஐவகை நிலங்களில் ஒன்று
2- இரவிலும் கூர்மையான பார்வை கொண்ட பறவை (குழம்பி)
3- தமிழ் இலக்கண விதிகளை வகுத்துக்கூறும் நூலின் ஆசிரியர்
4- உறவு என்பதன் எதிர்ப்பதம் (தலைகீழ்)
6- ஆறுவது இது என்பது ஔவையின் அறிவுரையாகும்.
8- எரியூட்டுதலைக் குறிக்கும் சொல் (தலைகீழ்)
11- தந்தையின் சொல்லிற்கு கட்டுப்பட்டு தாயின் தலையையே வெட்டிய கிருஷ்ண அவதாரம் ஒன்று (குழம்பி)
13- உலை வாயை மூடினாலும் இதன் வாயை மூடமுடியாது என்பது முதுமொழி (தலைகீழ்)
15- தர்மத்திற்கு புறம்பானது (தலைகீழ்)
17- குழந்தைகள் வைத்து விளையாடுவது (தலைகீழ்)
18- உடம்பு என்று பொருள்படும் பழந்தமிழ்ச் சொல்
20- வேகத்தைப் போன்றதொரு சொல்.
22- தலைவனைக் குறிக்கும் சொல்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 ம | ங் | 2 க | 3 ல | 4 வி | ள | க் | 5 கு |
| ட் | | 6 ர | ச | னை | | | ம |
| 7 ட | 8 ன் | கா | ம் | | | 9 ந | ரி |
| 10 க் | கா | ட் | கோ | 11 ழி | டு | | க் |
| க | | ட | | ஆ | | 12 தை | க |
| 13 ள | வ | ம் | 14 ப | | 15 சி | | ண் |
| ப் | | | 16 டை | 17 சா | ட் | | ட |
| 18 பு | ஷ் | ப | க | வி | மா | ன | ம் |



## குறுக்கெழுத்துப்போட்டி - 25 விடைகள்

# சித்திராங்கதா

29

காவ்யமோகன்

### வெள்ளையனும் வன்னியனும்

இது உத்தராயண காலமாகையால் வன்னிமண்ணின் கனல் அதியுச்சமாக இருந்தது. அடங்காப்பற்றின் குடி யேற்றம் பற்றி நாம் ஏற்கனவே கூறியிருக்கிறோம். பெரும்பாலும் பாரிய மரங்களினால் சூழப்பட்ட வனாந்தர பிரதேசமாகவே காண ப்பட்டது. ஆங்காங்கே சில குடியிருப்புக்கள். ஆனாலும் வளம் மிகுந்த ஒரு பிரதேசமாய் அதன் அடையாளங்கள் தெளிவாய்த் தென்பட்டன.

வன்னியத்தேவனை தேடி வந்த உக்கிரசேனன் அரண்மனையில் வன்னியத்தேவன் இல்லாததை அறிந்து அவன் மனக்கணக்கின்படி மேற்குக் கடற்கரை நோக்கி விரைந்தான்.

அந்தக்கடற்கரைப் பகுதியிலே ஏராளமான கூடாரங்கள் புதிதாக அமைக்கப்பட்டிருந்தன. உக்கிர சேனனது மனக்கணக்கு சரியாகத்தான் இருந்தது. அந்தக் கூடாரங்களிற்கிடையில் நிறுத்த ப்பட்டிருந்த பீரங்கிகளிற்கு அடு த்திருந்த ஓரளவு பெரிதாய்த் தெரிந்த கூடாரத்தின் வாயிலில் வன்னியத்தேவனது குதிரையை இனங்கண்டு கொண்டான். அவை யாவுமே போர்த்துக்கேயரால் நிறுவப்பட்ட கூடாரங்கள்தான் என்பதை அதன் லட்சணங்களைக் கொண்டு அவன் ஊகித்தறிந்து கொண்டான்.

வன்னியர் விழா பற்றிய செய்தியை உடனடியாக வன்னியத்தேவனிற்கு கூறியாக வேண்டும் என்று அவசரமாக விரைந்து வந்த உக்கிரசேனனிற்கு இப்போது அந்தக் கூடாரத்திற்குள் என்ன பேசிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிவதிலுள்ள ஆர்வமே அதிகமாக இருந்தது.

பறங்கி வீரர்கள் யாரும் தன்னைக் கண்டு கொள்ளாதபடி அக்கூடாரத்தின் பின்புறமாகச் சென்று ஒளிந்து கொண்டான் உக்கிரசேனன்.

கடலலைகளின் ஓசையைத் தாண்டி அந்த உரையாடலைச் செவிமடுப்பது அவனிற்கு உண்மையில் பெருஞ் சிரமமாகவே இருந்தது. அதனிலும் அந்த பறங்கித் தளபதி பேசுகிற விதத்தை புரிந்து கொள்வது கூட அவ்வளவு இலகுவானதல்ல.

“தமிழ்தான் பேசுகிறான் என்றாலும் எப்படிப் பேசுகிறான். அதைப் பொருத்திப் பார்த்துப் பொருள் தேடுவதிலே போதும் போதும் என்றாகிவிடும்.”
என்று தனக்குள்ளே சலித்துக் கொண்டான் உக்கிரசேனன். இருந்தாலும் ஒற்றனல்லவா? உன்னிப்பாகக் கேட்டுக் கொண்டேயிருந்தான்.

"டாம் லூயிஸ் தலைமையில் நடந்து கொண்டிருந்த கலவரங்களை எல்லாம் தஞ்சைப்படை வீரன் வந்து அடக்கி விட்டானாமே? யார் அந்த வருணகுலத்தான்? அவனைப்பற்றியே எங்கு பார்த்தாலும் பேச்சு இருப்பதாக எனக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. மாமன்னர் சங்கிலி சரியான ஆளைத்தான் அழைத்து வந்திருக்கிறார் போலிருக்கிறதே"

என்று அந்தப்பறங்கியன் கூறி முடிப்பதற்கே ஒரு நாழிகைப் பொழுது தேவைப்பட்டது போல் உக்கிரசேனனுக்குத் தோன்றியது.

தொடர்ந்து வன்னியத்தேவனின் குரல் ஒலித்தது.

"திருவாளர், பிலிப் டி ஒலிவேரா அவர்களே, என்ன இது? நீங்களே நம் எதிரிகளைப் பாராட்டத் துவங்கி



திவாகரன்

விட்டீர்கள்? சங்கிலி எப்போது மாமன்னன் ஆனான்? அதுவும் தங்களிற்கு! ”

அந்தப் போர்த்துக்கேயக் குரல் தொடர்ந்தது.

“எங்களிற்கு அவன் மாமன்னன் இல்லை. வெறும்மன்னன் தான். ஆனால் வன்னியத்தேவரே, உங்களவர்கள் சங்கிலியை மாமன்னன் என்றுதானே சொல்கிறார்கள். அதனால்த்தான் உம்மிடம் அப்படிச் சொன்னேன்.”

“என்னைப் பொறுத்தவரை அவன் வெறும் மன்னன் கூட இல்லை. அரச வழித்தோன்றல் என்கிற ஒரே காரணத்திற்காய் அரசானான துரோகி இந்தச் சங்கிலி. இவனெல்லாம் மன்னன் என்றால் நானும் மன்னன் தான். வன்னிக் குடிகளை என் ஆணை தான் இங்கு ஆள்கிறது. நான் போர்த்துக்கீசர்களின் நட்போடு சங்கிலியை வென்று இந்த ஈழத்திருநாட்டின் மாமன்னன் ஆவேன். இது நிச்சயம். இது குறித்து நான் ஏற்கனவே உங்கள் மேலதிகாரி கொன்ஸ்டாண்டின் டி சாவிடன் சொல்லியிருக்கிறேன்.”

என்று ஓங்காரமான குரலில் கூறி முடித்தான் வன்னியத்தேவன்.

“உண்மைதான். உமக்கு ஆதரவாகத்தானே நாங்கள் செயல்ப்படுகிறோம். ஆனால் இப்போது நிலைமை எமக்கு எதிராக மாறிக் கொண்டிருப்பது போலிருக்கிறதே!”

“அது எப்படி மாறும் ஒலிவேரா அவர்களே? போர் என்பது என்ன மந்திர வித்தையா?”

“அந்த வருணகுலத்தான் ஒரு மாபெரும் வீரன் என்று எல்லோரும் கூறுகிறார்கள். பத்துப்பேர் சூழ்ந்து கொண்டாலும், அவன் வாளை உருவினால் அடுத்த கணமே எதிரிகளின் தலைகள் இலையுதிர் காலத்துச் சருகுகள் போல மண்ணில் உதிர்கின்றனவாம். மின்னல் வேகத்தில் வாளைச் சுழற்றுகின்ற அவனை எதிர்க்க இந்த இலங்கை மண்ணில் எவருமே இல்லை என்று அனைவருமே பேசிக்கொள்கிறார்கள்.”

என்று பறங்கித்தளபதி கூறியதும் கைகொட்டிச் சிரித்தான் வன்னியத் தேவன்.

“ஒலிவேரா அவர்களே, இங்கே பெருங்கதைகள் இப்படித்தான். தாங்கள் அறிந்த கிரேக்க புராணக்கதைகளையும் மிஞ்சும் கற்பனைச் சாகசங்களை ஒரு தனிமனிதன் மீது ஏற்றிச் சொல்வதில் எங்களவர்கள் மிகவும் வல்லவர்கள். இதையெல்லாம் கேட்டு நீங்களுமா நம்புகிறீர்கள்? வருணகுலத்தான் என்ன வானிலிருந்து குதித்த கடவுளின் அவதாரமா? இது பீரங்கி யுகம் தளபதியாரே, அதுவும் உங்கள் போர்த்துக்கீசர்கள் மூலம்தானே இந்த மண்ணிலும் அந்த யுகம் தோன்றியுள்ளது.”
என்று கூறி மேலும் சிரித்தான் வன்னியத்தேவன்.

“வன்னியத்தேவரே, நீர் மகா புத்திசாலிதான். எங்கே வருணகுலத் தானைப் பற்றி மக்கள் பேசுவதை எல்லாங் கேட்டு நீர் மனந் தளர்ந்து விட்டீரோ என்று நினைத்தேன். உம்மைப் பரீட்சித்துப் பார்க்கவே இப்படிப் பேசினேன். நம்மிடம் ஏராளம் பீரங்கிகள் இப்போது இருக்கின்றனதான்.

ஆனால் போர் என்று துவங்கி விட்டால் இன்னும் நிறையத் தேவைப்படும். அதற்காகவே கொன்ஸ்டாண்டின் டி சா அவர்கள் கோவாவிலிருந்தும், நாகை பட்டினத்திலிருந்தும் ஏரளமான பீரங்கிகளும், வெடிமருந்துகளும் உள்ள மரக்கலங்களை வரவழைத் திருக்கிறார். அவை மன்னார்க்குடாக் கடலை நோக்கி வந்து கொண்டிருக்கின்றன. இனி அடுத்த திட்டத்தைப் பற்றி நீர் தான் கூற வேண்டும்.”

“அற்புதம் ஒலிவேரா! அற்புதம்”. சங்கிலி எப்படியும் இந்த மரக்கலங்கள் வருவது குறித்து அறிந்திருப்பான். அவன் பெரும் கிலி பிடித்த நிலையிலே இப்போது இருப்பான். நீங்கள் தைரியமாக புத்தளம், சிலாபம், முள்ளிக்குளம் வழியாக உங்கள் படை வீரர்களுடன் பூநகரியை நோக்கிப் புறப்படுங்கள். அங்கே நீங்கள் பாசறை அமைத்துத் தங்கினால்க் கூடப் போதும். சங்கிலி கதி கலங்கிப் போவான்.

பின்னர் தூதுவன் ஒருவன் மூலம் குடாக்கடலை கடந்து யாழ்ப்பாணம் சேர உதவ வேண்டும் என சங்கிலியனிடமே கோரிக்கை விடுங்கள். கதி கலங்கிப்போன தெளிவில்லாப் புத்தியோன் அதற்குச் சில வேளைகளில் சம்மதம் தெரிவிக்கக் கூடும் என்றே கருதுகிறேன். இல்லாது போய்விடினும் குடாக்கடலைக் கடக்க நான் வேறு உபாயம் கூறுவேன். அதற்கான ஏற்பாடுகளை நானும் செய்து கொண்டுதான் இருக்கிறேன். வருகின்ற சித்திரை முழுநிலவு நாளில் மட்டும் என் திட்டம் வெற்றி பெற்று விட்டால் சங்கிலியன் சரிவை யாராலும் தடுக்க முடியாமல் போய்விடும்.”

என்று கூறி வன்னியத்தேவன் தன் விலா நோகச் சிரித்தான்.

கூடாரத்திற்குப் பின்புறம் மறைந்து கேட்டுக் கொண்டிருந்த உக்கிரசேனனிற்கு வன்னியத் தேவனது மேற்படி வார்த்தைகள் ஆச்சரியத்தை அளித்தன.

“சித்திரை முழுநிலவு நாளில் என்ன திட்டம் குறித்துப் பேசுகிறார். ஒருவேளை வன்னியர் விழா குறித்து ஏற்கனவே அறிந்திருப்பாரோ? அதற்குத்தான் வாய்ப்பேயில்லையே”

என பல குழப்பங்கள் அவனிற்குள் எழ இனி மறைந்திருக்க பொறுமையில்லாமல் கூடார வாசலை நோக்கி வந்தான்.

**தொடரும்....**

# சூலக நீர்க்கட்டி நோய் நிலமை (Poly Cystic Ovarian Syndrome)

வைத்தியர் கணேஷ்


சூலக நீர்க்கட்டி நோய் நிலமை (Poly Cystic Ovarian Syndrome) என்பது

1.சூலகங்களில் உருவாகும் நீர்க் கட்டிகள் (Ovarian cysts) மற்றும்

2.பெண்களில் மாதவிடாய் சக்கரத்தில் ஏற்படும் அசாதாரண நிலைமை மற்றும்

3.பெண்களில் ஏற்படும் ஓமோன் சமனிலையின்மை என்பவற்றின் கூட்டாகும்.

இது மூன்று பெண்களில் ஒருவரைப் பாதிக்கிறது. பொதுவாக பெண்களைப் பருவமடைவதில் இருந்து மாதவிலக்கு நிற்கும் காலம் வரை எந்த நேரத்திலும் இது பாதிக்கலாம்.



## இந்நோய் ஏற்படுவதற்கான காரணங்கள் எவை ???

1.பரம்பரை (குடும்ப மரபணுக்கள்)
2.ஆரோக்கியமற்ற உணவுப் பழக்க வழக்கங்கள்
3.நிறை அதிகரிப்பு

## PCOSஇன் அறிகுறிகள்

•ஒழுங்கற்ற மாதவிலக்கு அல்லது மாதவிலக்கு இல்லாமலிருத்தல்

•குழந்தைப்பேறு இன்மை

•தலைமுடி மெலிதல் அல்லது உதிர்தல்

•முகம் அல்லது உடலில் அதிகப்படியாக முடி வளர்தல்

•முகப்பருக்கள்


• எடை அதிகரித்தல்

•பதற்றம் மற்றும் மன அழுத்தம் போன்ற பிரச்சினைகள்

•நீரிழிவு நோய் ஏற்படுவதற்கான உயர் அபாயம்

### ஸ்கான் மற்றும் இரத்த பரிசோதனைகள்

1. மீயொலி (அல்ட்ரா சவுண்டு) பரிசோதனை - இங்கு நீர்குமிழிகள் போன்ற பல நீர்க்கட்டிகள் சூலகங்களில் காணப்படும்.



2. இரத்தத்தில் சீனியின் அளவு
3. இரத்தத்தில் உள்ள கொலஸ் திரோல் அளவுகள்

### எவ்வாறு இந்நோயின் பாதிப்புக்களை குறைக்கலாம் ???

1.ஆரோக்கியமான உணவுகள்

2.உடற்பயிற்சி

3.உங்கள் உயரத்துக்கு ஏற்ற எடையை பேணுதல்

4.ஒழுங்கற்ற மாதவிலக்குகளை ஹார்மோன்கள், கருத்தடை மாத்திரை மற்றும் பிற மருந்துகள் மூலம் நிர்வகிக்கலாம்

5.அதிகப்படியான முடியை மெழுகு தடவுதல், லேசர் பயன்படுத்தி முடி அகற்றல், பிற முடி அகற்றும் உத்திகள், கருத்தடை மாத்திரை மற்றும் பிற மருந்துகள் மூலம் நிர்வகிக்கலாம்.

6.முகப்பருவை கருத்தடை மாத்திரை மற்றும் பிற மருந்துகள் மூலம் நிர்வகிக்கலாம்

### சூலக நீர்க்கட்டிகள் உள்ள பெண்கள் கருத்தரித்தலை மேம்படுத்த வழிகள்


1.ஆரோக்கியமான வாழ்க்கை முறை

2.எடை குறைப்பு

3.Metformin எனும் மருந்து நிறையைக் குறைக்க உதவும்

4.கருவளர்ச்சி மாத்திரைகள்

5.சூலகங்களில் துளையிடுதல் (Ovarian drilling)



16

# ஈழச் சூழலியல்

த.விதுர்ஷன்
மாணவன்
கொழும்பு பல்கலைகழகம்

மண்ணில் உயிர்ப்பல்வகைமையை மனித நகர்வுகள் பாதித்ததை போன்று நிச்சயமாக மண்வளத்தையும் பாதித்திருக்கின்றமை நிதர்சனம். ஆனால் அதற்குரிய முழுப்பொறுப்பையும் நாம் விவசாயிகளின் மேல் போட்டுவிடமுடியாது.



மிகச் சிறிய தீவான இலங்கையைப் பொறுத்தவரையிலே மற்றைய நாடுகள் போல் அங்கு காணப்படும் அதிகரித்த சனத்தொகை வளர்ச்சியும் அதனால் ஏற்படும் அதிகரித்த நிலைப்பாவனையும் அதன் வரையறுக்கப்பட்ட நிலப்பரப்பில் அமைந்த காடுகளை அதிகளவில் அழிவுக்குள்ளாக்குகின்றன. இதனால் பல தாவர, விலங்கினங்கள் அழிவுக்குள்ளாகி, அங்குள்ள உயிரினப்பல்வகைத்தன்மை அருகி வருவதைக் காணக்கூடியதாகவிருக்கின்றது.

ஐக்கிய நாடுகளின் உணவு விவசாய நிறுவனத்தகவல்களின்படி 1990 இலே 2 .4 மில்லியன் ஹெக்டராகக் காணப்பட்ட காடுகளின் பரப்பளவு 2010 இலே 1.9 மில்லியன் ஹெக்டயராகக் காணப்பட்டது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

‘விவசாய பசுமைப் புரட்சி’ என்றழைக்கப்பட்ட காலப்பகுதிக்கு முன்பு வடகிழக்கில் விவசாயிகள் இயற்கையோடொன்றித்த விவசாயத்தை மேற்கொண்டனர். காலங் காலமாக சுதேசமாகப் பெருக்கிக் காத்துவந்த விதையினங்கள் பயிர்களாயின.

அத்தோடு விலங்குகள், தாவரங்களிலிருந்து பெறப்பட்ட கழிவுகளும் தாவரங்களுக்கு உரமாயின. வடகிழக்கில் மிக அதிகளவான ஒருங்கிணைந்த பண்ணைமுறைமைகள் பழைய காலங்களிலே புழக்கத்திலிருந்தன. சூழலோடொன்றிணைந்த, நட்பியல் விவசாயமுறைமைகள் கைக்கொள்ளப்பட்டன.

பசுமைப்புரட்சியின்பின்னர் அசேதன இரசாயனங்கள் உரங்களாகவும், கிருமிநாசினிகளாகவும் விவசாயத் திலே பயன்படத்தொடங்கின.

விவசாயிகளின் விளைச்சல் அதிகரித்தது. ஆனால் விவசாய நிலங்கள் தமது இயற்கையை, கருவளத்தை இழந்தன. நிலங்கள் அசேதன இரசாயனங்களுக்கு மட்டுமே பயனளிக்கத் தொடங்கின. பாரம்பரிய விதையினங்கள் பாவனையிலிருந்து அருகின. புதிய புதிய கலப்பினங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.
அவைகளில் பூச்சி, பீடைகள் தாக்கம் அதிகரிக்கவே பூச்சி, பீடை நாசினிகளின் பாவனை என்றுமில்லாதவாறு அதிகரிக்கத் தொடங்கியது.

அதிகரித்த அசேதன இரசாயன ங்களின் பாவனையால் விவசாயம் செய்கின்ற மண்ணிலே உள்ள நுண்ணங்கிகள், பூச்சியினங்கள், மண்புழுக்கள், நத்தைகள் மற்றும் ஊரும் விலங்குகள் அழிவடையத் தொடங்கின. இதனால் சேதனப்பொருட்கள் மண்ணிலே உக்குவது இல்லாதொழிக்கப்பட்டது. அத்தோடு அதிகரித்த பீடை நாசினிப்பாவனையால் நன்மைதரும் பூச்சியினங்களான தும்பிகள், லேடிபேட் வண்டுகள், மற்றும் மகரந்தச் சேர்க்கைக்கு முக்கியமான தேனீக்கள் என்பன பாரிய அழிவைச் சந்தித்தன. ஆக மொத்தத்தில் இயற்கை விவசாயச் சூழற்றொகுதி முற்றாகக் குழப்பமடைந்துவிட்டது.இதைவிட இவ் அசேதன இரசாயனங்கள் குளங்கள், கிணறுகள், ஆறுகள் போன்ற நன்னீர்நிலைகளுடன் கலப்பதால் அது மனிதனுக்கும் ஏனைய விலங்குகளுக்கும் மிகப்பாதிப்பை ஏற்படுத்துகின்றன. உதாரணமாக வட இலங்கையிலே அண்மைக்காலங்களில்



அதிகரித்துள்ள புற்றுநோய்கள், சிறுநீரக நோய்கள், வேளாண் விலங்குகளின் அதிகரித்த இறப்புக்கள் என்பவற்றைக் குறிப்பிடலாம். சில விவசாயிகள் தமது சுயநலம் ஒன்றை மட்டுமே கருதிக்கொண்டு பின்வரும் வழிகளிலே தாம் வாழும் சமூகங்களுக்குத் துரோகமிழைக்கின்றார்கள்.

மரக்கறிகளுக்கு பீடைநாசினிகள் தெளித்தபின் அப்பீடைநாசினிகள் முற்றாக்கச் செயலிழக்கும் காலம் மட்டும் பொறுத்திருக்காது உடனேயே மரக்கறிகளை சந்தைப்படுத்துகிறார்கள். சில விவசாயிகள் சந்தைப்படுத்தலுக்கு வசதியாகத் தங்கள் விளைபொருட்களுக்கு நேரடி யாக இரசாயனத்தைப் பிரயோகி க்கிறார்கள். உதாரணமாக சில விவசாயிகள் வாழைக்குலைகள் மரத்திலிருக்கும்போதே அவற்றிக்கு யூரியா கட்டிவிடல், மாங்காய்களை, வாழைக்காய்களை விரைவாகப் பழுக்க வைப்பதற்காக செயற்கை இரசாயனங்களை ஊசி மூலம் ஏற்றுதல் என்பன. இவ்வாறான செயற்பாடுகள் கண்டிக்கத்தக்கவை. ஆனால் அசேதன விவசாயம் சார்ந்து விவசாயிகளின் தரப்பிலும் நாம் நின்று சிந்திக்க வேண்டும்.

விவசாயத்தில், புதிய தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி அதிக விளைச்சல், விதை, உரம், பூச்சி மருந்து, புதிய விவசாய உபகரணங்கள் (Farm Machine) அறிமுகப்படுத்தி அதிக விளைச்சல் உற்பத்தி செய்தலில் நாம் பாரம்பரிய கிராமங்களை விட்டுவிட்டோம். பாரம்பரிய விவசாய பழக்கத்தை மறந்துவிட்டோம்.



நம்முடைய சுகத்திற்கு, எளிமையான வாழ்க்கை முறைக்கு, தொழில் நுட்பம், மருத்துவம், பொறியியல் என அனைத்துத் துறைகளிலும் புதுமையை நாடுகின்ற நாம், ஏன் விவசாயத்தில் மட்டும் புதிய மாற்றத்தை ஏற்றுக்கொள்ளத் தயங்குகிறோம்?

முன்பு ஒரு விவசாயியின் குடும்பத்தில் குறைந்தது 5 முதல் 10 வரை உறுப்பினர்கள் விவசாயத்தை கவனித்து வந்தார்கள். ஒரு வீட்டில் 10 முதல் 20 மாடுகள் வரை இருக்கும். மாட்டுச் சாணம் குப்பைத் தொட்டியில் போட்டு மக்கிய உரம் அந்த வருடத்தில் பயிரிடப்படும் பயிர்களுக்குக் கிடைக்கும். வயல்வெளிகளைச் சுற்றி நிறைய மரங்கள் இருக்கும். புங்கம், வேப்பம் போன்ற மரங்களின் தழைகள் நெல் பயிரிடப்படும் சேற்றில் மிதித்து நெல் நடவு செய்வார்கள். இந்த நிலையைத் தற்போதைய விவசாய வல்லுனர்கள் இயற்கை விவசாயம், அங்கக

விவசாயம் (Organic Agriculture) என்று பல முறைகளாகக் கூறி வருகிறார்கள். தற்போது இயற்கை விவசாயம் செய்ய வேண்டுமானால், எத்தனை விவசாயிகளிடம் உழவு மாடுகள் உள்ளது. அப்படி மாடுகள் இருந்தால் எத்தனை பேர் மாடுகளை வைத்து ஏர் ஓட்டுகிறார்கள். அப்படியே இருந்தாலும் அத்தனை மாடுகளுக்கும் தேவையான தீவனங்கள் கிடைக்கிறதா? எத்தனை விவசாயிகள் ஏர் ஓட்டுவதற்குத் தயாராக உள்ளார்கள்?

மாறுகின்ற சூழ்நிலைக்கு ஏற்ப விவசாயத்தை மாற்றாவிட்டால், விவசாயிகளின் நிலைமை கேள்விக்குறியாக மாறிவிடும். விவசாயத் தொழில் லாபகரமாக இல்லாமல் போய்விடும். ஒரு காலத்தில் விவசாயம் செய்ய ஆட்களைத் தேட வேண்டிய நிலைக்கு நிச்சயம் செல்ல நேரிடும்.

இயற்கை வேளாண்மையைத் தவறு என்று சொல்லவில்லை. மேல் சொன்னவாறு விவசாயத்திற்கு மாடுகள், தேவையான அங்கக உரங்கள் இருந்தால் அப்படி விளைவிக்கும் பொருட்களுக்கு உண்மையில் கட்டுபடியான விலை கிடைத்தால், கண்டிப்பாக அனைத்து விவசாயிகளும் இயற்கை வேளாண்மையைச் செய்து அனைத்து பொருட்களுக்கும் செயற்கை உரம் போடாமல், பூச்சி மருந்து அடிக்காமல் கொடுத்திருப்பார்கள்.

ஆனால் அனைத்துத் துறையிலும் நாம் உபயோகிக்கும் பொருட்களில் மாற்றங்களை சந்தித்துவிட்டு, விவசாயத்தில் மட்டும் இன்னும் பழைய முறையில் செய்யப்படும் உணவுகள் கிடைக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது எப்படி நியாயமாக இருக்க முடியும் என்ற வினா எழுகின்றது. மனிதர்களாகிய நாம் அத்தனை மாற்றங்களையும் செய்துவிட்டு நான் இன்னும் பழமையை மட்டுமே விரும்புவேன் என்பதில் எந்த பலனும் இல்லை. சிந்தனை மாற்றம் என்பது செயல் மாற்றமாக்கப்பட வேண்டியது விவசாயிகளுக்கு மாத்திரமின்றி மனிதர்களாகிய நாம் அனைவரினதும் கூட்டுப்பொறுப்பாகும்.

ஆராய்வோம்...



# விபிள்டன் 2021

எஸ்.எஸ்.நுஜன்

டென்னிஸ் உலகில் பிரதானமாக நான்கு கிராண்ட்ஸ்லாம் தொடர்கள் வருடாவருடம் நடைபெறுகின்றன பிரெஞ்சு ஓபன், விம்பிள்டன் (லண்டன்), அமெரிக்கன் ஓபன் மற்றும் அவுஸ்திரேலியன் ஓபன். இவற்றில் விம்பிள்டன் (Wimbledon) தொடர், பாரம்பரியத்தாலும் காலத்தாலும் முன்னிலை வகிக்கிறது. கடந்த ஆண்டு கொரோனா காரணமாக இரண்டாம் உலகப் போருக்குப்பின் முதல் தடவையாக நடை பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இந்த ஆண்டு நடைபெற்ற தொடரின் விபரக்குறிப்புகளை தாங்கி வருகிறது இந்த பதிவு.

## ஆடவர் ஒற்றையர் பிரிவு (Gentlemen's Singles)

ஜூலை மாதம் 11ம் திகதி நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவின் இறுதி போட்டியில் முன்னணி வீரரும் முதல் நிலை வீரருமான செர்பியாவின் நோவாக் ஜோகோவிச், பெரும் எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் முதல் முறையாக விம்பிள்டன் இறுதிக்கு முன்னேறிய ஏழாம் நிலை வீரரான இத்தாலியின் மேட்டியோ பெரெட்டினி உடன் பலப்பரீட்சை நடத்தினார். இதில் முதல் செட்டை 6-7 (4-7) என இழந்த செர்பியாவின் நோவாக் ஜோகோவிச், அடுத்த செட்களை 6-4, 6-4, 6-3 என கைப்பற்றி தனது ஆறாவது விம்பிள்டன் கோப்பையை வென்றார். இது ஜோகோவிச்க்கு இருபதாவது கிராண்ட்ஸ்லாம் தொடர் வெற்றியாகும். இதன் மூலம் ஆடவர் ஒற்றையர் பிரிவில் 20 முறை கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றவர்கள் என்கிற ரோஜர் பெடரர் மற்றும் ர.ஃ.பேல் நடால் ஆகியோரின் உலக சாதனை சமன் செய்தார்.



இதுவரை ஜோகோவிச் 30 கிராண்ட்ஸ்லாம் இறுதி போட்டிகளில் விளையாடியுள்ளார். இவர் 2008 இல் தன் முதல் கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை அவுஸ்திரேலியன் பகிரங்க

தொடரில் வென்ற போது, தன் 20 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களில் 12 இனை பெற்றிருந்தார் பெடரர்.

2021 இல் 34 வயதான ஜோகோவிச் 34 போட்டிகளிலும், 25 வயதான பெரெட்டினி 32 போட்டிகளிலும் வெற்றி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்த வருடம் நடைபெற்ற அவுஸ்திரேலியன் பகிரங்க தொடர், பிரஞ்சு பகிரங்க தொடர், மற்றும் தற்போது விம்பிள்டன் தொடர் என மூன்று கிராண்ட்ஸ்லாம் தொடர்களிலும் வெற்றி பெற்றுள்ள ஜோகோவிச், அடுத்து வரவுள்ள அமெரிக்கன் பகிரங்க தொடரையும் வென்றால் ஒரே ஆண்டில் நான்கு பிரதான கிராண்ட்ஸ்லாம் தொடர்களை வென்ற வீரர் என்ற பெருமையை பெறுவார்.

### மகளிர் ஒற்றையர் பிரிவு (Ladies' Singles)

மகளிருக்கான விம்பிள்டன் தொடரின் (மொத்தமாக 116 போட்டிகள்) இறுதிப்போட்டி கடந்த 10ம் திகதி யூலை மாதம் நடைபெற்றது. இதில் உலகின் முதல் நிலை வீராங்கனையான அவுஸ்திரேலியாவின் ஆஷ்லி பார்ட்டி (Ashleigh Barty) மற்றும் செக் குடியரசின் கரோலினா பிலிஸ்கோவா (Karolina Pliskova) போட்டியிட்டனர். 1977ஆம் ஆண்டுக்கு பிறகு, முதல் முறையாக இரண்டு வீராங்கனைகள் தம் முதலாவது புற்தடை கிராண்ட்ஸ்லாம் தொடரின் இறுதி போட்டியில் ஆடுவது குறிப்பிடத்தக்கது. முதல் செட்டை 6-3 என கைப்பற்றிய பார்ட்டி, இரண்டாம் செட்டை 6-7 என இழந்தார். பின் மூன்றாம் செட்டை மறுபடியும் 6-3 என கைப்பற்றிய பார்ட்டி தனது முதலாவது விம்பிள்டன் கோப்பையை வென்றார்.

ஆஷ்லீ பார்ட்டி க்கு இது இரண்டாவது கிராண்ட்ஸ்லாம் வெற்றியாகும். இதற்கு முன்னர் 2019 இல் பிரெஞ்சு பகிரங்க (French Open) போட்டியை வென்று தன் முதல் கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை வென்றிருந்தார்.

25 வயதான பார்ட்டி 2011 இல் இளையோர் விம்பிள்டன் (Junior Wimbledon) கோப்பையை வென்ற வீராங்கனை ஆவார். இதனால் இரு விம்பிள்டனையும் வென்ற நான்காவது பெண்மணியானார்.



41 வருடங்களிற்கு பின் முதல் முறையாக ஒரு அவுஸ்திரேலியர் விம்பிள்டன் கோப்பையை வெல்வது குறிப்பிடத்தக்கது. அத்துடன் பார்ட்டியின் வழிகாட்டியும் (Mentor) இலட்சிய மனிதருமான (Idol) Evonne Goolagong Cawley, தனது முதல் விம்பிள்டன் கோப்பையை வென்ற 50வது ஆண்டு விழாவில் தன் முதல் விம்பிள்டன் கோப்பையை அவுஸ்திரேலியாவின் ஆஷ்லி பார்ட்டி வென்றுள்ளார்.

## ஆடவர் இரட்டையர் பிரிவு (Gentlemen's Doubles)

இதன் இறுதிப் போட்டியில் முதல் நிலை ஜோடியான குரோவாசியாவின் (Croatia) Nikola Mektic மற்றும் Mate Pavic க்கெதிராக அர்ஜென்டினாவின் Horacio Zeballos மற்றும் ஸ்பெயினின் Marcel Granollers ஆடினர். இதில் 6-4, 7-6(5), 2-6, 7-5 என வென்ற குரோவாசியாவின் இரட்டையர்களான Nikola Mektic மற்றும் Mate Pavic விம்பிள்டன் கோப்பையை வென்ற முதலாவது குரோவாசியா நாட்டு வீரர்களானார்கள்.



இது பவிக் (Pavic) க்கு மூன்றாவது கிராண்ட்ஸ்லாம் இரட்டையர் வெற்றி ஆகும். 2017இல் பவிக் விம்பிள்டன் இறுதியில் தோற்றிருந்தாலும், இது மெக்ரிக்கின் முதலாவது விம்பிள்டன் இறுதி போட்டியாகும். இந்த போட்டி இரண்டு மணிநேரம் 44 நிமிடங்கள் நீடித்திருந்தது.

## மகளிர் இரட்டையர் பிரிவு (Ladies' Doubles)

இரண்டரை மணி நேரம் நீடித்த இந்த இறுதி போட்டியில் ரஷ்யாவின் Elena Vesnina மற்றும் Veronika Kudermetova வை எதிர்த்து தாய்வானின் Su-Wei Hsieh மற்றும் பெல்ஜியத்தின் Elise Mertens இணை ஆடியது. இதில் ரஷ்ய இணையை 3-6, 7-5, 9-7 என தோல்வியுற செய்தனர் Hsieh மற்றும் Metens. Hsieh மற்றும் Metens இணை தனது ஐந்தாவது தொடரில் விம்பிள்டன் கோப்பையை வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

2013 மற்றும் 2019 இலும் வேறு வேறு இணைகளுடன் விம்பிள்டன் வென்ற Hsieh க்கு இது மூன்றாவது விம்பிள்டன் இரட்டையர் பட்டம் ஆகும். அத்துடன் இந்த வருடமும்

வென்று தனது விம்பிள்டன் இரட்டையர் பட்டத்தையும் தக்கவைத்துக் கொண்டுள்ளார்.

### கலப்பு இரட்டையர் பிரிவு (Mixed Doubles)

ஜூலை மாதம் 11ம் திகதி, மூன்று இங்கிலாந்து வீரர்கள் பங்கெடுத்த கலப்பு இரட்டையர் பிரிவின் இறுதி போட்டி, கடந்த 13 நாட்களாக நடைபெற்ற விம்பிள்டன் 2021 தொடரின் கடைசி போட்டியாக அமைந்திருந்தது. இதில் இங்கிலாந்தின் Neal Skupski மற்றும் அமெரிக்காவின் Desirae Krawczyk அணி, இங்கிலாந்தின் Joe Salisbury மற்றும் Harriet Dart அணியை 6-2, 7-6(1) என்கிற செட் கணக்கில் வெற்றி பெற்றது.

இந்த ஆண்டின் பிரஞ்சு பகிரங்க தொடரை ஜோய் (Joe Salisbury) உடன் வென்ற கலிபோர்னியாவின் 27 வயதான டிசிரே (Desirae Krawczyk), தற்போது விம்பிள்டன் 2021 பட்டத்தை நீல் (Neal Skupski) உடன் சேர்ந்து வென்றுள்ளார்.

இவற்றை விடவும் சக்கர நாற்காலி ஒற்றையர் மற்றும் இரட்டையர் பிரிவு ஆட்டங்களும் ஆண்கள் (Boys') மற்றும் பெண்களுக்கான (Girls') ஒற்றையர் மற்றும் இரட்டையர் பிரிவு ஆட்டங்களும் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.



**G. WHEELCHAIR SINGLES: J. GERARD**
**L. WHEELCHAIR SINGLES: D. DE GROOT**
**Q. WHEELCHAIR SINGLES: D. ALCOTT**
**G. WHEELCHAIR DOUBLES: A. HEWETT and G. REID**
**L. WHEELCHAIR DOUBLES: Y. KAMIJI and J. WHILEY**
**Q. WHEELCHAIR DOUBLES: A. LAPTHORNE and D. WAGNER**

**BOYS' SINGLES: S. BANERJEE**
**GIRLS' SINGLES: A. MINTEGI DEL OLMO**
**BOYS' DOUBLES: E. BUTVILAS and A. MANZANERA PERTUSA**
**GIRLS' DOUBLES: K. DMITRUK and D. SHNAIDER**